Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ்Mirror

www.tamilmirror.lk

THURSDAY, MAY 29 2025

வியாழக்கிழமை 29, மே 2025 | ஒளி: 10 கதிர் 249 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE

# வயது குறைந்த கர்ப்பம் எங்கு அதிகம்?



இலங்கையில் உள்ள பிற பிரதேச செயலகப் பிரிவுகளுடன் ஒப்பிடும்போது, அதிக போதைப்பொருள், துஷ்பிரயோகம் சதவீதம், அதிக போதைப்பொருள் கடத்தல் சதவீதம் மற்றும் வயது குறைந்த கர்ப்பம் மற்றும் கைவிடப்பட்ட குழந்தைகளின் அதிகரித்துள்ள பிரதேச செயலகப் பிரிவாக, கதிர்காமம் பிரதேச

தொடர்ச்சி P2



# “பின்வாங்குவது இல்லை”

“சமூக முன்னேற்றத்தை நோக்கி எடுக்கப்பட்ட நடவடிக்கைகளில் இருந்து பின்வாங்குவது இல்லை” என ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க, திங்கட்கிழமை (28) தனது எக்ஸ் தளத்தில், மேலே இருக்கும் படத்துடன் பதிவிட்டுள்ளார்.

### மாதவிடாய் களங்கத்தால் பல பெண்கள்

# “அமைதியாக அவதி”



மிகவும் இயற்கையான நிகழ்வான பெண்களின் மாதவிடாய் சுழற்சி தொடர்பில் சமூகத்தில் இருந்து எழும் களங்கம் காரணமாக பெண்கள் பாதிக்கப்படுவதாகவும், அதிலிருந்து அவர்களை விடுவிப்பது அவசியம் என்றும் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

“மாதவிடாய் வறுமைக்கு எதிரான கூட்டு நடவடிக்கைக்கான திட்டம்” என்ற தலைப்பில் கோல்பேஸ் ஹோட்டலில் செவ்வாய்க்கிழமை (27) நடைபெற்ற *‘Period Pride 2025’* மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே

தொடர்ச்சி P2




# மீண்டும் PCR

புதிய கொவிட்-19 திரிபால் ஏற்படும் உலகளாவிய அச்சுறுத்தலைக் கருத்தில் கொண்டு, சுகாதார அமைச்சு சில வைத்தியசாலைகளில் PCR (polymerase chain reaction) பரிசோதனையை அதிகரித்துள்ளது.

மேலும், PCR பரிசோதனை வசதிகளைக் கொண்ட வைத்தியசாலைகள்கள், தற்போது கொவிட் -19 நோயாளிகளைக் கண்டறிய அதிக எச்சரிக்கையுடன் உள்ளதாக சுகாதார அமைச்சில் புதன்கிழமை (28) அன்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் சுகாதார அமைச்சின் செயலாளர் டாக்டர் அனில் ஜாசிங்க தெரிவித்தார்.

அதோடு, காய்ச்சலுக்கு அனுமதிக்கப்படும் அல்லது சிகிச்சை பெறும் நோயாளிகளின் கண்காணிப்பை அதிகரிக்க மருத்துவமனைகளுக்கு அமைச்சு அறிவுறுத்தியுள்ளதாகவும் தெரிவித்தார்.

இலங்கை தொடர்ந்து நிலைமையை உன்னிப்பாகக் கண்காணிக்கும் என்றும், ஆனால் உடனடியாக எந்த கட்டுப்பாடுகளையும் விதிக்க முடியாது என்றும் டாக்டர் ஜாசிங்க மேலும் கூறினார்.



# ஏற்றுமதித் தொழில்துறையின் சவால்கள் குறித்து அவதானம்

ஏற்றுமதித் தொழில்துறையின் சவால்கள் தொடர்பான கலந்துரையாடல் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தலைமையில் ஜனாதிபதி அலுவலகத்தில் திங்கட்கிழமை (28) இடம்பெற்றது.

கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களின் தலைவர்களும் நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் அதிகாரிகளும் கலந்துகொண்ட இக்கலந்துரையாடலில், உள்நாட்டு உற்பத்தியை வலுப்படுத்தும் அதே வேளை ஏற்றுமதிக்கு முன்னுரிமை அளிக்கும் உற்பத்திப் பொருளாதாரத்தை நோக்கிய அரசாங்கத்தின் வேலைத்திட்டம் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டது.

அத்துடன், இதன்போது எழுந்துள்ள சவால்களை வெற்றிகொள்வதற்கு நீண்டகால கைத்தொழில் அபிவிருத்தித் திட்டத்தைத் தயாரிப்பது தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டது.

ஏற்றுமதி துறையை மேம்படுத்த எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டதுடன், அது தொடர்பான முன்மொழிவுகள் மற்றும் திட்டங்களும் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டன.

# திருமலையின் புதிய மேயர்

எஸ்.கீதபொன்கலன்

திருகோணமலை மாநகர சபையின் மேயர் பதவிக்கு இலங்கை தமிழரசுக் கட்சியின் புதிய மாநகர சபை உறுப்பினர் கந்தசாமி செல்வராஜாவின் பெயரைக் கட்சி முன்மொழியத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக இலங்கை தமிழரசுக் கட்சியின் மாவட்ட தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சண்முகம் குகதாசன் ஊடகங்களுக்கு புதன்கிழமை (28) அன்று தெரிவித்தார்.



அவர் மேலும் தெரிவிக்கையில், “மாநகரசபைக்குப் புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட 9 உறுப்பினர்கள் எனது தலைமையில் கூடி,ஜனநாயக முறைப்படி இந்த தீர்மானத்தை மேற்கொண்டனர். இதேபோன்று மாவட்டத்தில் கட்சி அதிக ஆசனங்களை வெற்றி பெற்ற சபைகளுக்கான தலைவர் மற்றும் உப தலைவர் தெரிவுகளுக்கும் ஜனநாயக முறைப்படி நடைபெறும்” எனவும் குறிப்பிட்டார்.

### உகந்தமலை முருகன் ஆலய நிர்வாகம்:

# வண்ணக்கரின் கீழ் இனிமேல் செயற்படும்

வி.ரி.சகாதேவராஜா

லாகுகலை பிரதேச செயலகத்தின் கீழ், கடந்த மூன்று வருட காலமாகப் பரிபாலிக்கப்பட்டு வந்த வரலாற்றுப் பிரசித்தி பெற்ற உகந்தைமலை முருகன் ஆலய நிர்வாகம், இனிமேல் பாரம்பரிய முறைப்படி வண்ணக்கர் தலைமையில் செயற்படும் என கிழக்கின் பிரபல சிரேஷ்ட சட்டத்தரணி நடராஜா சிவரஞ்சித் தெரிவித்தார்.

உகந்தமலை முருகன் ஆலயம் தொடர்பாக பொத்துவில் மாவட்ட நீதிமன்றத்தில் மூன்று வழக்குகள் விசாரணையில் உள்ளன .

அவற்றில் ஒரு வழக்கு பொத்துவில் மாவட்ட நீதிமன்றத்தில் கடந்த வாரம் நடைபெற்ற போது ஓர் இணக்கப்பாட்டின் அடிப்படையில் தீர்மானத்துக்கு நீதிபதியால் கட்டளையிடப் பட்டிருக்கிறது.

அந்த வழக்குகளில் ஆலயம் சார்பில் சட்டத்தரணி நடராஜா சிவரஞ்சித்



ஆஜராகி வருகிறார். நீதிமன்றத்தின் இந்த தீர்மானம் தொடர்பாக சட்டத்தரணி நடராஜா சிவரஞ்சித் கூறுகையில்.

உகந்தமலை முருகன் ஆலயம் தொடர்பாக மூன்று வழக்குகள் பொத்துவில் மாவட்ட நீதிமன்றத்தில் சமகாலத்தில் சென்று விசாரிக்கப்படுகின்றன.

ஆலய நிர்வாக செயற்பாடுகள் மீண்டும் வண்ணக்கர் தலைமையில் கொண்டு வர வேண்டும் என்ற ரீதியிலே தொடரப்பட்ட வழக்கு கடந்த வாரம்

தொடர்ச்சி P2



# 600 KG ஹெரோயின், ஐஸுடன் 2 படகுகள் சிக்கின: 11 பேர் கைது

இலங்கை கடற்படையினர், மாநில புலனாய்வு சேவை, பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பணியகம் மற்றும் பிராந்திய செயல்பாட்டு ஒருங்கிணைப்பு மையம் ஆகியவற்றுடன் இணைந்து மேற்கொண்ட விசேட தேடுதல் நடவடிக்கையின் போது, இலங்கையின் தெற்கே ஆழ்கடலில் போதைப்பொருட்களைக் கொண்டு சென்ற இரண்டு உள்ளூர் பல நாள் மீன்பிடி படகுகளுடன் 11 பேரை கடற்படையினர் சந்தேகத்தின் பேரில் கைது செய்தனர்.

குறித்த, பல நாள் மீன்பிடி படகுகள் திக்கோவிட்ட துறைமுகத்திற்குக் கொண்டு வரப்பட்டு, திங்கட்கிழமை (28) பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பணியகத்தின் நிபுணர்களின் உதவியுடன் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன. வரப்பட்ட போதைப்பொருட்கள் ஹெரோய்ன் மற்றும் ஐஸ் என்பது உறுதி செய்யப்பட்டதுடன், போதைப்பொருட்களின் அளவு தோராயமாக அறுநூறு (600) கிலோ கிராம்களுக்கு மேல் இருப்பது உறுதி செய்யப்பட்டது. பாதுகாப்பு பிரதி அமைச்சர் மேஜர் ஜெனரல் அருண ஜெயசேகர (ஓய்வு), கடற்படைத் தளபதி மற்றும் பதில் பொலிஸ் மா அதிபர் ஆகியோருடன் போதைப்பொருள் கையிருப்பை ஆய்வு செய்வதில் பங்கேற்றனர்.



# பிகினிகள் தடை: தவறான செய்தி

அறுகம்பே குடா சுற்றுலாப் பகுதியில் பிகினிகள் தடை செய்யப்பட்டுள்ளதாகக் கூறும் தவறான செய்தி குறித்து அவசரமாக விசாரிக்கப் பாதுகாப்பு அமைச்சகம் மற்றும் பதில் பொலிஸ்மா அதிபரைக் கேட்டுக் கொண்டுள்ளதாக சுற்றுலாத்துறை பிரதி அமைச்சர் பேராசிரியர் ருவான் ரணசிங்க தெரிவித்தார்.



சுற்றுலாத் துறையைக் குறிவைத்து தவறான செய்திகளைப் பரப்புவதன் மூலம் அரசாங்கத்தை அவமானப்படுத்த முயற்சிக்கும் ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட குழு இதற்குப் பின்னால் இருப்பதாகப் பிரதி அமைச்சர் சந்தேகிக்கிறார்.

தொடர்ச்சி P2

# குச்சவெளியில் மூவர் எதிர்ப்பு

அபு அலா

முஸ்லிம் காங்கிரஸுடன் இணைந்து குச்சவெளி பிரதேச சபையை ஆட்சியமைக்கத் தமிழரசுக் கட்சியின் மூன்று உறுப்பினர்கள் தங்களின் எதிர்ப்பை தெரிவித்து வருகின்றனர். இதனால் குச்சவெளி பிரதேச சபையை இரு கட்சிகளும் இணைந்து ஆட்சியமைப்பதில் பாரிய இழுபறி நிலை தோன்றியுள்ளது.

தொடர்ச்சி P2

### தென்னகோனுக்கு எதிரான 9 மனுக்கள்:

# 5 நீதியரசர்கள் அமர்வின் முன்பாக வருகிறது



தேசபந்து தென்னகோனை பொலிஸ் மா அதிபராக (ஐ.ஜி.பி) நியமித்ததை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட ஒன்பது அடிப்படை உரிமைகள் மனுக்கள் செப்டெம்பர் மாதம் 8ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று உயர் நீதிமன்றம் புதன்கிழமை (28)அறிவித்துள்ளது.

இந்த மனுக்கள் மீதான விசாரணைகள், நீதியரசர்களான ஜனக் டி சில்வா,

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# வயது குறைந்த கர்ப்பம் எங்கு அதிகம்?

செயலகப் பிரிவு அடையாளம் காணப்பட்டுள்ளதாகக் கதிர்காமம் பிரதேச செயலாளர் பிரதீப் குலதிலக கூறுகிறார்.

'பின்பர கதிர்காமம் போசன் மண்டலம் -2025' என்ற பெயரில் ஏற்பாடு செய்யப்பட்டு, பிரதேச செயலாளரின் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் அவர் இதனைத் தெரிவித்தார். இந்த கூட்டம், திங்கட்கிழமை (26) அன்று நடைபெற்றது.

"எங்கள் அதிகார வரம்பில் ஐந்து பிரிவுகள் உள்ளன. நூற்று நாற்பத்தேழு பாதிக்கப்படக்கூடிய பிள்ளைகள் அடையாளம் காணப்பட்டு ஆவணப்படுத்தப்பட்டுள்ளனர். அவர்களில், பெற்றோர் ஒருவர் அல்லது இருவரையும் இழந்த பிள்ளைகளும், இரு பெற்றோர்களையும் இழந்த பிள்ளைகளும் அடங்குவர். இந்தப் பிள்ளைகளில் பலர் பாடசாலைகளுக்குச் செல்ல வேண்டிய நேரத்தில் பாடசாலைகளுக்குச் செல்லவில்லை. படிக்கவோ எழுதவோ தெரியாத பல பிள்ளைகள் உள்ளனர். இந்தப் பிள்ளைகளை இந்த ஆபத்தான சூழ்நிலையிலிருந்து விரைவில் மீட்பதற்கான ஒரு முறையைத் திட்டமிட வேண்டும். இங்கு கூடியிருக்கும் அனைவரும் இது தொடர்பாக உதவ வேண்டும்.

மேலும், இந்த 147 பிள்ளைகளையும் அவர்களின் இடங்களிலிருந்து அழைத்துச் சென்று ஒரு பராமரிப்பு மையம் நிறுவி தேவையான அனைத்து பராமரிப்பும் வழங்கப்பட வேண்டும்."

போசன் பந்தலை ஏற்பாடு செய்வதற்காகக் கதிர்காம சஹான சமாஜத்தை நிறுவிய கதிர்காம அபிநவராமய கோயிலின் தலைமைக் குருவான கபுகம சரண திஸ்ஸ தேரர் இந்த நிகழ்வில் பங்கேற்று, இந்த 147 பாதிக்கப்படக்கூடிய பிள்ளைகளில் ஒருவருக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் கண்டுபிடித்து வழங்கத் தயாராக இருப்பதாகக் கூறினார்.

இந்த சூழ்நிலையிலிருந்து பிள்ளைகளை மீட்காவிட்டால், கஞ்சா, போதைப்பொருள், ஐஸ் மற்றும் திருட்டு போன்ற குற்றங்களுக்கு ஆளாகும் ஒரு சமூகம் கதிர்காமத்தில் உருவாகும் வாய்ப்பு உள்ளது என்றும் அந்த தேரர் சுட்டிக்காட்டினார்.

எனவே, பிரதேச செயலாளரின் தலைமையில் தேவையான நிறுவனங்கள் மற்றும் சிவில் ஆர்வலர்களின் ஆதரவுடன் விரைவில் ஒரு தீர்வைக் கண்டுபிடித்துச் செயல்படுத்த வேண்டும் என்றும் பிரதிநிதிகள் வலியுறுத்தினர்.

# வண்ணக்கரின் கீழ் இனிமேல் செயற்படும்

நீதிமன்றிலே எடுத்து கொள்ளப்பட்டது.

இருதரப்பு வாதங்களையும் ஏற்ற நீதிபதி, இரு சாராரும் இணக்கப்பாட்டிற்கு வந்தமையால் பொதுவான தீர்மானத்தை

வழங்கியிருந்தார். இரு சாராரினதும் இணக்கப்பாட்டினால் ஆலய நிர்வாகம் இனிமேல் பாரம்பரிய முறைப்படி வண்ணக்கர் தலைமையில் இயங்கும் என்றும் நிதி செயல்பாடுகள் பிரதேச செயலாளர் கண்காணிப்பில் இடம்பெறும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவித்தார் .

அதன்படி, ஆலய வண்ணக்கர் சுதுநிலமே திஸாநாயக்க சுதா, பாரம்பரிய சம்பிரதாயங்களைக் கடைப்பிடித்து ஆலயத்தை இனிமேல் வழிநடத்தவுள்ளார். புதிய நிர்வாகம் மிக விரைவில் தெரிவு செய்யப்படும் என்று தெரிகிறது.

# 5 நீதியரசர்கள் அமர்வின் முன்பாக வருகிறது

சோபித ராஜகருணா மற்றும் சம்பத் விஜேரத்ன ஆகியோர் அடங்கிய மூன்று நீதியரசர்கள் கொண்ட அமர்வால் செப்டெம்பர் 8ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது..

இந்த மனுக்கள் அடுத்த விசாரணையில் உயர் நீதிமன்றத்தின் ஐந்து நீதியரசர்கள் கொண்ட அமர்வு முன் விசாரிக்கப்பட உள்ளன.

தேசபந்து தென்னகோன் பொலிஸ் மா அதிபர் பதவியின் அதிகாரங்கள், செயல்பாடுகள் மற்றும் பொறுப்புகளைப் பயன்படுத்துவதைத் தடுத்து நிறுத்தி உயர் நீதிமன்றம் ஏற்கெனவே இடைக்கால உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

மேலும், மனுதாரர்கள் இந்த நியமனம் அரசியலமைப்பின் பொருந்தக்கூடிய விதிகளுக்கு முரணானது என்று பரிந்துரைக்கும் வலுவான முதன்மை வழக்கை முன்வைத்துள்ளனர் என்றும் உயர் நீதிமன்றம் கூறியது.

பொலிஸ் மா அதிபராக அவர் நியமிக்கப்பட்டதை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட ஒன்பது அடிப்படை உரிமைகள் மனுக்களின் இறுதித் தீர்ப்பு வரும் வரை இந்த உத்தரவு அமலில் இருக்கும்.

பேராசிரியர் சாவித்திரி குணசேகர, நிரோஷன் பாதுக்க, கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து, மல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை, தரிந்து இரங்க ஜயவர்தன, ஹிருணிகா பிரேமச்சந்திர, ஆதம் லெப்பை ஆசாத், எஸ்.கே. பிரியங்கா மற்றும் ஏ.என். எஸ். சொய்சா ஆகியோர் இந்த மனுக்களை தாக்கல் செய்துள்ளனர்.

இதில், ஜனாதிபதி, அரசியலமைப்பு பேரவையின் தலைவர், சபாநாயகர், அரசியலமைப்பு பேரவை உறுப்பினர்கள், சட்டமா அதிபர் மற்றும் பலர் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

# இலங்கையர்களுக்கு பஹ்ரைனில் வேலைவாய்ப்பு

இலங்கையிலுள்ள திறமையான தொழிலாளர்களுக்கு பஹ்ரைனில் ஏராளமான வேலைவாய்ப்பு வாய்ப்புகள் இருப்பதாகக் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் தலைவர் கோசல விக்ரமசிங்க கூறினார்.

அமர்வை பஹ்ரைனில் உள்ள இலங்கை தூதரகம் ஏற்பாட்டில், பஹ்ரைனில் இயங்கும் உரிமம் பெற்ற ஆட்சேர்ப்பு நிறுவனங்களின் பிரதிநிதிகளுடன் நடைபெற்ற ஊடாடும் வலையமைப்பு அமர்வில் பங்கேற்றபோதே அவர் இந்தக் கருத்துக்களை தெரிவித்தார்.

தற்போது பஹ்ரைனுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள தலைவர் கோசல விக்ரமசிங்க, தொழிலாளர் இடம்பெயர்வு தொடர்பான இருதரப்பு ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவதையும், இலங்கை வெளிநாட்டினரின் நலன் மற்றும் பாதுகாப்பை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டு பஹ்ரைன் அதிகாரிகளுடன் கலந்துரையாடினார்.

வெளிநாடுகளில் பணிபுரியும் இலங்கையர்களின் உரிமைகள் மற்றும் கண்ணியத்தைப் பாதுகாப்பதில் தனது உறுதிப்பாட்டை வலியுறுத்திய கோசல விக்ரமசிங்க, பஹ்ரைனை தளமாகக் கொண்ட ஆட்சேர்ப்பு நிறுவனங்களின் தொடர்ச்சியான ஆதரவையும் தீவிர ஈடுபாட்டையும் பாராட்டினார்.

கூட்டத்தில் உரையாற்றிய பஹ்ரைனுக்கான இலங்கை தூதர் ஷானிகா திசாநாயக்க,

இலங்கையின் திறமையான பணியாளர்களை விரிவுபடுத்துவதற்கும் வெளிநாட்டு வேலை வாய்ப்புகளை அதிகரிப்பதற்கும் அரசாங்கத்தின் பரந்த முயற்சிக்கு ஏற்ப திறமையான தொழிலாளர்களை ஆட்சேர்ப்பு செய்வதை ஊக்குவிப்பதன் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார்.

பஹ்ரைனில் இலங்கை தொழிலாளர்களுக்கான ஆட்சேர்ப்பு செயல்முறையை நெறிப்படுத்துதல், நெறிமுறை ஆட்சேர்ப்பு நடைமுறைகளை ஊக்குவித்தல் மற்றும் வெளிநாட்டு தொழிலாளர்களுக்கான நலன்புரி



மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளை வலுப்படுத்துதல் ஆகியவற்றை மையமாகக் கொண்ட விவாதங்கள் நடைபெற்றன.

பஹ்ரைனின் செழிப்பான தொழிலாளர் சந்தையில் வேலைவாய்ப்புக்கான புதிய வழிகளை ஆராயும் அதே வேளையில், இலங்கை தொழிலாளர்களின் நல்வாழ்வையும் பாதுகாப்பையும் உறுதி செய்வதில் இணைந்து பணியாற்றுவதற்கான தங்கள் உறுதிப்பாட்டை இரு தரப்பினரும் மீண்டும் உறுதிப்படுத்தினர்.

## இலங்கையின்

# ஆடை ஏற்றுமதி வலுவான செயல்திறன் பதிவு

ஏப்ரல் 2025ல் இலங்கையின் ஆடை ஏற்றுமதி வலுவான செயல்திறனை பதிவு செய்துள்ளது, மொத்த ஏற்றுமதிகள் கடந்த ஆண்டு அதே மாதத்துடன் ஒப்பிடும்போது 15.14% அதிகரித்துள்ளன. இந்த வளர்ச்சிக்கு அமெரிக்கா (6.83% அதிகரிப்பு), ஐரோப்பிய ஒன்றியம் (UK-ஐக்கிய இராஜ்சியம் தவிர) (27.04% அதிகரிப்பு), மற்றும் ஐக்கிய இராஜ்சியம் (7.45% அதிகரிப்பு) உள்ளிட்ட முக்கிய சந்தைகளில் இருந்து வந்த உறுதியான தேவை காரணமாகும். பிற சந்தைகளுக்கான ஏற்றுமதிகளும் 21.18% அதிகரித்துள்ளது என கூட்டு ஆடைச் சங்கங்களின் மன்றம் (JAAF)விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனவரி முதல் ஏப்ரல் 2025 வரை, மொத்த ஆடை ஏற்றுமதி 1.66 பில்லியன் அமெரிக்க டொலர்களை எட்டியுள்ளது. இது 2024 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தை விட 12.4% அதிகரிப்பைக் காட்டுகிறது. குறிப்பாக, ஐரோப்பிய ஒன்றியத்திற்கான ஏற்றுமதி 18.13%, அமெரிக்காவிற்கான ஏற்றுமதி 10.06%, மற்றும் பிற சந்தைகளுக்கான ஏற்றுமதி 13.56% அதிகரித்துள்ளன. அதே நேரத்தில், இங்கிலாந்து சந்தை 6.26% வளர்ச்சி அடைந்துள்ளது.

இந்த முடிவுகள் தற்போதைய உலகளாவிய சவால்களுக்கு மத்தியில் இலங்கையின் ஆடைத் துறையின் தாங்கும் திறனையும், தொடர்ச்சியான போட்டித்தன்மையையும் மீண்டும் உறுதிப்படுத்துகின்றன.

இந்த முடிவுகள், உலகளாவிய சவால்கள் நீடிக்கும் இந்தக் காலகட்டத்திலும் இலங்கையின் ஆடைத் தொழில்துறையின் உறுதிப்பாடு மற்றும் போட்டித்தன்மையை ஏற்பட்டுள்ளது என்பதை மீண்டும் உறுதிப்படுத்துகின்றன என்றும் குறிப்பிட்டுள்ளது.

# மோசமான வானிலையால் 416 குடும்பங்கள் பாதிப்பு

கடந்த எட்டு நாட்களாக, எட்டு மாவட்டங்களில் நிலவிய மோசமான வானிலை காரணமாக, சுமார் 416 குடும்பங்களைச் சேர்ந்த 1,520 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது.

கடுங்காற்று, திடீர் வெள்ளம், வெள்ளம், மின்னல், மரம் முறிந்து விழுதல் மற்றும் சுவர் இடிந்து விழுதல் ஆகியன காரணமாக 8 பேர் காயமடைந்துள்ளனர். பகுதியளவில் 321 வீடுகள் சேதமடைந்துள்ளன என்றும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது.

புத்தளம், யாழ்ப்பாணம், ஹம்பாந்தோட்டை, காலி, களுத்துறை, கொழும்பு, இரத்தினபுரி மற்றும் கேகாலை மாவட்டங்களில் இவ்வனத்தம் ஏற்பட்டுள்ளது.

இதற்கிடையில், தென்மேற்கு பருவமழை தீவிரமடைந்துள்ளதால், மேற்கு மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும், காலி, மாத்தறை, நுவரெலியா மற்றும் கண்டி மாவட்டங்களிலும் அடுத்த சில நாட்களில் மழை பெய்யும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சேதங்களைக் குறைக்க போதுமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்குமாறு பொதுமக்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

# "அமைதியாக அவதி"

பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய இதனைத் தெரிவித்தார்.

பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய, அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

பெண்களின் மாதவிடாய் என்பது அவமதிக்கப்படக்கூடிய ஒரு விடயமல்ல என்றும், இது ஒரு இயற்கையான நிகழ்வு என்றும், மாதவிடாய் ஆரோக்கியம் மற்றும் மாதவிடாய் வறுமை ஆகியவை வெறும் சுகாதாரப் பிரச்சினை மட்டுமல்லாது, கண்ணியம், சமத்துவம் மற்றும் மனித உரிமைகள் தொடர்பான விடயமாகும் என்றும் பிரதமர் வலியுறுத்தினார்.

திருகோணமலை, கண்டி மற்றும் கொழும்பு பிரதேசங்களை மையமாகக் கொண்டு நடத்தப்பட்ட அண்மைய ஆராய்ச்சியின்படி, பெண்களுக்கான சானிட்டரி நாப்கின்கள் இல்லாததால் பல பாடசாலை மாணவிகள் பாடசாலைக்குச் செல்வதைத் தவிர்க்கின்றனர் என்பது தெரிய வந்துள்ளது என்றும், பல பெண்கள் பாதுகாப்பற்ற தெரிவுகளை நாடுகின்றனர் என்றும், இது மிகவும் ஆபத்தானதாகும் என்றும் பிரதமர் சுட்டிக்காட்டினார்.

பெண்களின் மாதவிடாய் ஆரோக்கியம் தொடர்பில் சமூகத்திலிருந்து எழும் களங்கம் காரணமாகப் பல பெண்கள் அமைதியாக அவதிப்படுகிறார்கள், இந்த நிலைமை மாற வேண்டும் என்றும் மாதவிடாய் எவருடைய உடல்நலம், கல்வி அல்லது கண்ணியத்திற்கும் இடையூறாக அமையக்கூடாது என்பதை உறுதி செய்வதற்கு விரைவான மற்றும் முறையான திட்டம் ஒன்று தேவை என்றும் பிரதமர் கூறினார்.

13 வயதுக்கு மேற்பட்ட அனைத்து பாடசாலை மாணவிகளுக்கும் இலவச சானிட்டரி நாப்கின்களை வழங்கும் திட்டத்தைக் கல்வி அமைச்சு ஏற்கெனவே நடைமுறைப்படுத்தியுள்ளது என்பதைச் சுட்டிக்காட்டியதுடன், குறிப்பாக குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களை சேர்ந்த மாணவிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படுவதாகவும், மாதவிடாய் காரணமாக எந்த ஒரு பெண் பிள்ளையும் பாடசாலைக்குச் செல்வதைத் தவிர்க்கக்கூடாது என்பது தனது தனிப்பட்ட கருத்து என்றும் அவர் வலியுறுத்தினார்.

அடுத்த ஆண்டு முதல் மீண்டும் பயன்படுத்தக்கூடிய சுகாதார நப்கின்களை வழங்கும் திட்டத்தைச் செயற்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் பெண்களுக்கான சுகாதார நாப்கின் மீதான அனைத்து வரிகளையும் நீக்கக் கோரிக்கைகள் கிடைத்துள்ளன என்றும் இந்த விடயத்தில் சில சாதகமான முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ள போதிலும், அதை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு விரிவான கொள்கைகள் மற்றும் சீர்திருத்தங்கள் அவசியம் என்றும் பிரதமர் கூறினார்.

இந்த விடயம் தொடர்பாக நிதியமைச்சுடன் கலந்துரையாடி வரியினை நீக்கும் திட்டத்தை முன்னெடுத்துச் செல்ல எதிர்பார்ப்பதாகவும், இதற்காக சிவில் சமூகம் மற்றும் தனியார் துறையின் ஆதரவை எதிர்பார்ப்பதாகவும் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

இந்த நிகழ்வில், பிரான்ஸ் நாட்டின் தூதுவர் ரெமி லம்பேர்ட், இலங்கை குடும்பக் கட்டுப்பாட்டு சங்கத்தின் பிரதிநிதிகள், சமூக ஆர்வலர்கள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# குச்சவெளியில் மூவர் எதிர்ப்பு

திருகோணமலை மாவட்ட மூதூர் பிரதேச சபை மற்றும் குச்சவெளி பிரதேச சபை ஆகியவற்றில் தமிழரசுக் கட்சி மற்றும் முஸ்லிம் காங்கிரஸ் கட்சி ஆகியன இணைந்து ஆட்சியமைப்பதற்கான பல நிபந்தனைகளுடன் கூடிய ஒப்பந்தம் செவ்வாய்க்கிழமை (27) திருகோணமலை தமிழரசுக் கட்சி காரியாலயத்தில் கைச்சாத்திடப்பட்டது.

குறித்த ஒப்பந்தத்தில் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் சார்பாக அக்கட்சியின் தேசிய அமைப்பாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.எஸ்.தௌபீகும் தமிழரசுக் கட்சி சார்பாக திருகோணமலை மாவட்ட குழுத் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சண்முகம் குகதாசன் ஆகியோர் கையொப்பமிட்டனர்.

குறித்த ஒப்பந்தத்தில் மூதூர் பிரதேச சபை மற்றும் குச்சவெளி பிரதேச சபை ஆகியவற்றில் இரு கட்சிகளும் தலா இரண்டு வருடங்களைப் பகிர்ந்து கொள்வதெனவும், மூதூர் பிரதேச சபையின் முதல் இரண்டு வருடங்களைத் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் ஒருவருக்கு தவிசாளர் பதவியையும், முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் ஒருவருக்கு உப- தவிசாளர் பதவியை வழங்குவது எனவும் இறுதி இரண்டு வருடங்களுக்கு முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் ஒருவருக்கு தவிசாளர் பதவியும், தமிழரசுக் கட்சியின் உறுப்பினர் ஒருவருக்கு உப-தவிசாளர் பதவியையும் வழங்குவதென முடிவெடுக்கப்பட்டது.

அதேபோன்று, குச்சவெளி பிரதேச சபையில் முதல் இரண்டு வருடங்களை முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் ஒருவருக்கு தவிசாளர் பதவியையும், தமிழரசுக் கட்சியின் உறுப்பினர் ஒருவருக்கு உப -தவிசாளர் பதவியை வழங்குவதெனவும், இறுதி இரண்டு வருடங்களுக்குத் தமிழரசுக் கட்சியின் உறுப்பினர் ஒருவருக்கு தவிசாளர் பதவியையும், முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் ஒருவருக்கு உப-தவிசாளர் பதவியையும் வழங்குவதெனவும் இணங்கியே இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுக் கொண்டனர்.

இந்நிலைமையில், குச்சவெளி பிரதேச சபையை முஸ்லிம் காங்கிரஸ் கட்சியுடன் இணைந்து ஆட்சியமைக்கப் போகப் போவதில்லையென்று தமிழரசுக் கட்சியின் மூன்று உறுப்பினர்கள் தங்களின் எதிர்ப்பைத் தெரிவித்து செவ்வாய்க்கிழமை (27) கைச்சாத்திட்ட புரிந்துணர்வு ஒப்பந்த நிகழ்வில் கலந்துகொள்ளவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

# பிகினிகள் தடை: தவறான செய்தி

இந்த விடயம் குறித்து பாதுகாப்பு பிரதி அமைச்சர், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மற்றும் பதில் பொலிஸ் மா அதிபருக்கு அறிவிக்க ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

அறுகம்பே விரிகுடா சுற்றுலாப் பகுதியில் ஒரு வெளிநாட்டு சுற்றுலாப் பயணி நிர்வாணமாக நடந்து செல்வதைக் கண்டதைத் தொடர்ந்து இந்தப் பிரச்சினை ஆரம்பித்தது. இந்த சம்பவத்தின் அடிப்படையில் 'பிகினி தடை' குறித்து சமூக ஊடகங்களில் மக்கள் தவறான செய்திகளைப் பரப்புவது முற்றிலும் ஏற்றுக்கொள்ள முடியாதது என்றும் பிரதி அமைச்சர் கூறினார். பிகினிகளைத் தடை செய்ய அரசாங்கம் எந்த முடிவும் எடுக்கவில்லை என்பதை அவர் உறுதிப்படுத்தினார்.

முஸ்லிம் சமூகத்திற்கும் பிற குழுக்களுக்கும் இடையே பிரச்சினைகளை உருவாக்கவும், அரசாங்கத்திற்கு சிக்கலை ஏற்படுத்தவும் இந்த சமூக ஊடகப் பதிவு பகிரப்பட்டதாக அவர் நம்புகிறார்.

இது போன்ற சம்பவங்கள் நாட்டின் பொருளாதாரம் மற்றும் சுற்றுலாத் துறைக்கு கடுமையான பாதிப்பை ஏற்படுத்தும் என்று துணை அமைச்சர் மேலும் கூறினார். தற்போது பல வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தருகின்றனர், மேலும் இதுபோன்ற தவறான செய்திகள் அவர்களை மாலத்தீவுகள் அல்லது பாலி போன்ற பிற நாடுகளை தேர்ந்தெடுக்கத் தள்ளக்கூடும் என்று அவர் அஞ்சுகிறார்.

திருகோணமலை-அறுகம்பே விரிகுடா கடற்கரைப் பகுதி இலங்கையில் சர்ஃபிங்கிற்கு சிறந்த இடம் என்றும் அவர் எடுத்துரைத்தார். இந்த ஆண்டு ஒரு மில்லியன் சுற்றுலாப் பயணிகளை வரவேற்க நாடு எதிர்பார்க்கும் நேரத்தில், இதுபோன்ற சம்பவங்கள் சர்வதேச அளவில் இலங்கையின் நற்பெயருக்கு தீங்கு விளைவிக்கும்.

இதற்கிடையில், உள்ளூராட்சி நிறுவனங்களில் கட்டுப்பாட்டைப் பெறுவது குறித்து முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் அரசாங்கம் ஜூன் 6 ஆம் திகதி நடத்தவிருக்கும் கலந்துரையாடல்களை சீர்குலைக்க இந்தப் பிரச்சினை பயன்படுத்தப்படலாம் என்று அவர் சந்தேகிக்கிறார். இது ஒரு அரசியல் நெருக்கடியைத் தூண்டும் முயற்சியாக இருக்கலாம் என்று அவர் நம்புகிறார்.

சுற்றுலாத் துறையை குறிவைத்து பொருளாதாரத்தை சேதப்படுத்த முயற்சிக்கும் எந்தவொரு தனிநபர் அல்லது குழுவிற்கும் எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று பிரதி அமைச்சர் எச்சரித்தார்.

கடந்த ஆண்டு வெலிகமவில் பிலிப்பைன்ஸ் சுற்றுலாப் பயணி ஒருவர் தாக்கப்பட்ட சம்பவத்தின் காணொளியை சமூக வலைத்தள ஊடகவியலாளர் ஒருவர் யூடியூப்பில் மீண்டும் பகிர்ந்ததற்கு அவர் வருத்தம் தெரிவித்தார். இந்த நபர் நேபாளத்திலும் இதேபோன்ற சம்பவத்தில் ஈடுபட்டதாகவும், மோதலை ஊக்குவிக்க சமூக ஊடகங்களைப் பயன்படுத்துவதாகவும் விசாரணைகள் கண்டறிந்துள்ளன.

இதுபோன்ற நடவடிக்கைகள் தொடர்பாக அனைத்து இலங்கையர்களும் புத்திசாலித்தனமாகவும் பொறுப்புடனும் செயல்பட வேண்டும் என்றும் பிரதி அமைச்சர் வலியுறுத்தினார்.

இறுதியாக, வரவிருக்கும் ஓஃப்-சீசன் காலத்தில் குறைவான சுற்றுலாப் பயணிகள் வருவார்கள் என எதிர்பார்க்கப்படுவதால், முடிந்தவரை அதிகமான வெளிநாட்டுப் பார்வையாளர்களை ஈர்க்க அரசாங்கம் வலுவான நடவடிக்கைகளை எடுக்கும் என்று அவர் குறிப்பிட்டார். இதுபோன்ற தவறான தகவல்கள் இலங்கையின் நற்பெயருக்கு கடுமையான சேதத்தை ஏற்படுத்தும் என்று அவர் குற்றஞ்சாட்டினார்.

# சர்வதேச விசாரணையை வலியுறுத்தி ஆர்ப்பாட்டம்






**பாறுக் ஷிஹான்**

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் அமைதி வழி ஆர்ப்பாட்டம் அம்பாறை மாவட்டம் திருக்கோவில் பகுதியில் செவ்வாய்க்கிழமை(27) அன்று முன்னெடுக்கப்பட்டது.

இலங்கை அரசிடம் நீதி கோரிய போதும் தீர்வுகள் கிடைக்காத நிலையில் தற்போது சர்வதேசத்திடம் நீதி கோரி இந்த ஆர்ப்பாட்டத்தை அவர்கள் முன்னெடுத்துள்ளனர்.

அம்பாறை மாவட்ட காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைத் தேடும் குடும்பங்களின் சங்கத் தலைவி தம்பிராசா செல்வராணி தலைமையில் இடம்பெற்ற குறித்த கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் சிவில் சமூக செயற்பாட்டாளரும் அம்பாறை மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்க ஆலோசகருமான தாமோதரம் பிரதிபன், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் என பலர் கலந்து கொண்டிருந்தனர்.

மேலும், சர்வதேசத்தின் கவனத்தை ஈர்க்கும் வகையில், காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் புகைப்படங்களை ஏந்தியவாறும் வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறும் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கு என்ன நடந்தது என்பதற்குச் சர்வதேச விசாரணையை வலியுறுத்தி இந்த பேரணி இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## சீன அமைச்சர் இலங்கைக்கு விஜயம்

சீன மக்கள் குடியரசின் வர்த்தக அமைச்சர் வாங் வென்டாவோ, மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயத்திற்காக திங்கட்கிழமை (28) இலங்கைக்கு வருகை தந்துள்ளார்.

அவரை, வர்த்தக, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு மேம்பாட்டுத் துறை துணை அமைச்சர் ஆர்.எம்.ஜெயவர்தனே மற்றும் வெளியுறவு மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புத் துறை பிரதி அமைச்சர் அருண் ஹேமசந்திர ஆகியோர் வரவேற்றுள்ளனர்.



இந்த உத்தியோகபூர்வ விஜயத்தின் போது, மே 29ஆம் திகதி நடைபெறும் இலங்கை-சீன கூட்டுப் பொருளாதார ஒத்துழைப்பு குழுவின் 8வது அமர்விலும், மே 30ஆம் திகதி கொழும்பில் நடைபெறும் இலங்கை-சீன முதலீடு மற்றும் வணிக மன்றத்திலும் அமைச்சர் வாங் வென்டாவோ கலந்துகொள்ள உள்ளார்.

## வருடாந்த திருவிழா

சாவகச்சேரி- நுணாவில் மேற்கு, விளைவேலி மருதடி அருள்மிகு வீரகத்தி விநாயகர் தேவஸ்தான வருடாந்த திருவிழா ஞாயிற்றுக்கிழமை(01) காலை 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 11 நாட்கள் இடம்பெறவுள்ளது.

இதற்கமைய, 7ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4 மணிக்கு வேட்டைத் திருவிழாவும், 8ஆம் திகதி இரவு 7 மணிக்கு சப்பறத் திருவிழாவும் 9ஆம் திகதி காலை 9.30 மணிக்குத் தேர்த் திருவிழாவும் 10ஆம் திகதி காலை 9.30 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் அன்று இரவு 7 மணிக்கு கொடியிறக்கமும் 11ஆம் திகதி காலை 9.30 மணிக்கு பிராயச்சித்த அபிஷேகமும் அன்று மாலை 5 மணிக்குப் பூங்காவனத் திருவிழாவும் 12ஆம் திகதி மாலை 5.30 மணிக்கு வைரவர் பொங்கலும் இடம்பெறவுள்ளன.



ஆலய பிரதம குரு 'பண்டிதர்' சிவஸ்ரீ து.கு.ஜெகதீஸ்வரக் குருக்கள், மகோற்சவ குரு 'கிரியாரத்தினா' சிவஸ்ரீ ராம் சண்முகானந்தக் குருக்கள், ஆலய குரு பிரம்மஸ்ரீ ராஜ் குருக்கள் யதீஸ்வர சர்மா ஆகியோர் கிரியைகளை நடத்தி வைக்கவுள்ள நிலையில், விளைவேலி மருதடி அருள்மிகு வீரகத்தி விநாயகர் தேவஸ்தான போஷகர்-மாவை ஆதீனம் மஹாராஜஸ்ரீ மாவை து.ச.ரத்தின சபாபதி குருக்கள் ஆசியுரை வழங்கவுள்ளார்.

## மாபெரும் தொழிற் சந்தை

**ஏ.எச்.ஹஸ்பர்**

திருகோணமலை மாவட்ட தம்பலகாமம் பிரதேச செயலகத்தில் செவ்வாய்க்கிழமை (28) அன்று மாபெரும் தொழிற் சந்தை ஒன்று இடம்பெற்றது.

தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதியின் வழிகாட்டுதலுக்கிணங்க இடம்பெற்ற குறித்த தொழிற் சந்தையை, தம்பலகாமம் பிரதேச செயலகமும் மனித வலு அபிவிருத்தி வேலை வாய்ப்பு திணைக்களமும் இணைந்து ஏற்பாடு செய்திருந்தனர்.

தொழில் வாய்ப்பற்ற இளைஞர்களுக்கான தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்ளவும் தொழில்வாண்மையான பாடநெறிகளை தொடர்வதற்குமான வாய்ப்புகள் இங்கு இடம் பெற்றன.



இதில் அரச சார்பற்ற தனியார் நிறுவனங்கள் அரச துறைசார் இராணுவ ஆட்சேர்ப்பு போன்ற பல துறைகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான நேர்முகத் தேர்வுகள் இடம் பெற்றன. இதில் பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் இரா.பிரசாந்தன், பிரதி திட்டமிடல் பணிப்பாளர் ஐ.முஜீப், நிருவாக உத்தியோகத்தர் B.U.B.L.உடகெதர, மனிதவலு வேலை வாய்ப்பு திணைக்கள மாவட்ட இணைப்பாளர்கள் ,அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

## சிறுத்தையால் மக்கள் அச்சம்

**ரஞ்சித் ராஜபக்ஷ**

நன்கு வளர்ந்த சிறுத்தையொன்று இரவும் பகலும் லிந்துலை -நாகசேன ஹீல் கூல்ட்ரீ தோட்டத்தில் சுற்றித் திரிவதைக் கண்டு தோட்டத் தொழிலாளர்கள் அச்சமடைந்துள்ளனர்.

அந்த சிறுத்தை இரை தேடி தோட்ட குடியிருப்புகளுக்கு அருகில் வந்து, செல்லப்பிராணியான நாய்களை வேட்டையாடி செல்வதாகத் தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

தோட்டத்தையும் காப்புக்காட்டையும் பிரிக்கும் வகையில் ஒரு வலை வேலி கட்டப்பட்டிருந்தாலும், சிறுத்தை அதை உடைத்துக் கொண்டு வருவதாகத் தோட்டத் தொழிலாளர்கள் கூறுகின்றனர்.



தோட்டத்தில் பணிபுரியும் தொழிலாளர்கள், பாடசாலை செல்லும் மாணவர்கள் பல சந்தர்ப்பங்களில் அந்த சிறுத்தையைக் கண்டுள்ளதாகவும் தங்கள் உயிருக்கும், தங்கள் குழந்தைகளின் உயிருக்கும் தீங்கு விளைவிப்பதற்கு முன்பு அதைப் பிடித்து உரிய சூழலுக்குக் கொண்டு சென்று விடுமாறும் அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## 'ஹரக் கட்டா'வுக்கு எதிராக வழக்குக்கு திகதி குறிப்பு

குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் இருந்து தப்பிச் செல்ல முயன்றமை தொடர்பில் பாதாள உலக கும்பலின் தலைவரும் போதைப்பொருள் கடத்தல்காரருமான 'ஹரக் கட்டா' என அழைக்கப்படும் நதுன் சிந்தக விக்ரமரத்ன என்பவர் உட்பட மூவருக்கு எதிரான வழக்கு விசாரணைக்குத் திகதி குறிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு, ஜூன் மாதம் 09ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என கொழும்பு மேல் நீதிமன்றம் புதன்கிழமை (28) உத்தரவிட்டுள்ளது.

சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 'ஹரக் கட்டா' பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

## வங்காலையில் கடலரிப்பை பார்வையிட்ட ரவிகரன் எம்.பி.



**விஜயரத்தினம் சரவணன்**

மன்னார் - நானாட்டான், வங்காலைப் பகுதியிலுள்ள கடலரிப்பு நிலைமைகளை, அப்பகுதி மக்களின் அழைப்பையேற்று வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், செவ்வாய்க்கிழமை(27) அன்று நேரடியாகச் சென்று பார்வையிட்டுள்ளார்.

இந்நிலையில் அப்பகுதி மக்களின் இடர்பாடுகளைக் கேட்டறிந்த அவர், கடலரிப்பை தடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பில் தம்மால் கவனம் செலுத்தப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருகையில்,

வங்காலை பகுதியில் கடலரிப்பு நிலைமைகள் அதிகரித்துள்ளதால் கடல்நீர் கடற்கரையோர கிராமங்களுக்குள் உட்புகும் நிலை காணப்படுகின்றது. இதனால் அப்பகுதி மக்கள் பலத்த இடர்பாடுகளுக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.

அப்பகுதி மக்கள் இவ்விடயம் தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர் ரவிகரனுக்கு தெரியப்படுத்தியதையடுத்து, அவர் நேரடியாகச் சென்று நிலைமைகளைப் பார்வையிட்டுள்ளதுடன், மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளையும் கேட்டறிந்து கொண்டுள்ளார்..

ஏற்கெனவே கடலரிப்பைத் தடுப்பதற்கு வங்காலை பகுதியில் தடுப்பணை அமைக்கப்பட்டதைப் போன்று, ஆறு இடங்களில் தடுப்பணைகள் அமைக்கப்பட வேண்டும் எனவும், இதன் மூலமே கடல் நீர் கிராமத்திற்குள் உட்புகுவதைத் தடுக்கமுடிவதுடன், அதனால் ஏற்படக்கூடிய பாதிப்புக்களையும் தடுக்கமுடியுமென மக்களால் அவரின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டது.

கடலரிப்பால் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவேண்டும் என தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர், இந்த சிக்கல் நிலைமை தொடர்பில் உரிய தரப்பினரது கவனத்திற்குக் கொண்டு சென்று, தடுப்பணை அமைப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்படும் என தெரிவித்துள்ளார்.









## நியூசிலாந்து பிரதிப் பிரதமருடன்

இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள நியூசிலாந்து பிரதிப் பிரதமரும், வெளியுறவு அமைச்சருமான வின்சென்ட் பீட்டர்ஸுக்கும் (Vinston Peters) ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க, பிரதமர் ஹரிணி அமரசூரிய மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கும் இடையில் சந்திப்பு இடம்பெற்றது,







# வயது குறைந்த கர்ப்பமும்; சமூக சீர்கேடுகளும்

குழந்தை கர்ப்பம் என்பது பொதுவாகப் பருவ வயதை எட்டாத பெண்களின் கர்ப்பமாகும். இது மனித சமூகத்தில் மிகவும் கடுமையான பிரச்சனையாகும்.

பாலியல் வன்கொடுமை. இளம் காதல் உறவுகள் ஹோட்டல் அறைகள் வரை நீண்டுள்ளது. இளம் வயது திருமணம் வயது குறைந்த கர்ப்பத்துக்குப் பிரதான காரணங்களாக அமைந்துள்ளன.

நமது நாட்டில் 2023ஆம் ஆண்டில், 167 சிறுமிகளும், 2024இல், 213 சிறுமிகளும் கர்ப்பமானார்கள். சிறுமிகள் கர்ப்பம் பெரும்பாலும் பாலியல் துஷ்பிரயோகம் காரணமாகவே நிகழ்கிறது. அது நாட்டின் சமூக வீழ்ச்சியில் ஒரு முக்கியமான கட்டமாகும்.

இலங்கையில் உள்ள பிற பிரதேச செயலகப் பிரிவுகளுடன் ஒப்பிடும்போது, அதிக போதைப்பொருள், துஷ்பிரயோகம் சதவீதம், அதிக போதைப்பொருள் கடத்தல் சதவீதம் மற்றும் வயது குறைந்த கர்ப்பம் மற்றும் கைவிடப்பட்ட குழந்தைகளின் அதிகரித்துள்ள பிரதேச செயலகப் பிரிவாக, கதிர்காமம் பிரதேச செயலகப் பிரிவு அடையாளம் காணப்பட்டுள்ளது.

ஒரு பெண் குழந்தைப் பருவத்தைக் கடந்த பின்னரே தாயாக வேண்டும். குழந்தைப் பருவத்தைக் கடக்காமல் தாயாக மாறும் பெண்களால், சமூகம் ஒரு சிதைந்த அலகாக மாறுகிறது. மனித சமூகத்திற்கும் விலங்கு சமூகத்திற்கும் பெரிய வித்தியாசம் இல்லை. இந்த நாட்டில் இளமைப் பருவத்தைக் கடக்காத ஏராளமான விபச்சாரிகள் உள்ளனர்.

டீனேஜர்களாக இருக்கும் பல தெருப் பெண்கள் உள்ளனர். இந்தப் பெண்களுக்குப் பிறப்புக் கட்டுப்பாட்டு முறைகள் அல்லது சமூக நோய்கள் பற்றிய அறிவு இல்லை. ஒரு பெண் தாயான பிறகு, அவளுடைய குழந்தைப் பருவம் முற்றிலுமாக அழிக்கப்படுகிறது.

சரியான கல்வி இல்லாத, வறுமை மற்றும் கல்வியறிவின்மை ஆகியவை குழந்தைப் பருவத்தில் பெரிதும் பாதிக்கும் இரண்டு காரணிகளாகும். உலகில் ஒவ்வொரு ஆண்டும் சராசரியாக 21 மில்லியன் குழந்தைப் பருவ கர்ப்பங்கள் பதிவாகின்றன. இந்த கர்ப்பங்களில் இருந்து சுமார் 12 மில்லியன் குழந்தைகள் பிறக்கின்றன.

பொதுவாக, 10 முதல் 19 வயதுக்குட்பட்ட பெண்கள் கர்ப்பமாகும்போது, அவர்கள் பல்வேறு நோய்கள் மற்றும் தொற்றுகளுக்கு ஆளாகும் அபாயத்தில் உள்ளனர். குழந்தைப் பருவத்தில் கர்ப்பமாக இருக்கும் தாய்மார்களுக்குப் பிறக்கும் குழந்தைகள் மிகவும் எடை குறைவாக இருப்பார்கள்.

இந்த நாட்டில் குழந்தை கர்ப்பம் பற்றி சிறுமிகளுக்கு கல்வி கற்பிக்க சரியான திட்டம் இல்லை. இந்த விழிப்புணர்வு பணியைத் தொடங்குவதற்கு முன்முயற்சி எடுக்கலாம். குறைந்த கல்வி, சரியான பெற்றோர் பராமரிப்பு இல்லாமை, கவனிப்பு இல்லாமை போன்ற காரணங்களால் இது ஏற்படுகிறது.

இந்தப் பிரச்சினைக்குத் தீர்வாக, பாடசாலை வயதுக் குழந்தைகளுக்கு இனப்பெருக்க ஆரோக்கியம் குறித்து மேலும் கல்வி கற்பிப்பதன் மூலமும், சமூக மட்டத்தில் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்குக் கல்வி கற்பித்தல் போன்ற திட்டங்களை நடத்துவதன் மூலமும் இந்த சூழ்நிலையைக் குறைக்க முடியும் என்பதே எமது அவதானிப்பாகும்.


தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்



தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

உங்களுடன் நண்பர்கள் சுற்றியிருக்க விரும்பும்போது, நீங்கள் தேவையில்லாமல் விலகினால், உங்களுக்கு மனச்சோர்வு இருக்கின்றது என்று அர்த்தம். இதற்கு ஒரே வழி, நீங்களே உங்களுடன் தோழமை கொள்வதுதான். உங்களுக்கு நீங்களே எஜமானன். அத்துடன், உங்களுக்கு நீங்களே நம்பிக்கையான நபரும் கூட!

ஒருவரிடம் பணம் இருக்கும்போது, அவரைச் சுற்றி, பலர் சேர்ந்துவிடுவார்கள். அவரிடம் இருக்கும் பணத்தைச் செலவழிக்கச் செய்த பின்னர், அவரைக் கைகழுவி, நடுத்தெருவில் விட்டுவிடுவது உலக யதார்த்தம். ஆனால், நல்ல நண்பர் எத்தகைய துன்பங்கள் சூழ்ந்து வந்தாலும் காவல் செய்யும் காவலன் போல் இணைந்தே இருப்பான்.

நண்பர்கள் என்று நம்பி, அவர்கள் கெட்டவர்கள் என்று தெரியாமல் போனவர்களை நாங்கள் அன்றாடம் சந்தித்துக்கொண்டிருக்கின்றோம். நண்பர்களிடம் நம்பி

இயலாது; என்னால் முடியாது எனும் எண்ணங்கள் தகர்க்கப்படல் வேண்டும். அனுபவப்பட்டவர்களுக்கு ரோசம் அதிகம். எளிதில் எவருடனும் நட்புக் கொள்ளல் ஆகாது. வீறு பெற்றவனை வீழ்த்த முடியாது. நடுவீதியில் தனிமைப்பட்டு நிற்பது பரிதாபமானது. எனவே, துணிவுடன் இயங்குவதே மனோபலத்தை உருவாக்கும்.

– பருத்தியூர் பால.வயிரவநாதன்

## கடிதங்கள்

### "பாலத்தை புனரமைத்து தரவும்"

வவுணதீவு பிரதேசத்திலுள்ள மகிழவெட்டுவான் பாலம் கடந்த 2023 டிசெம்பர் மாதம் உடைக்கப்பட்டதால், 2 வருடமாக மட்டக்களப்பு - மகிழவெட்டுவான் இடையிலான போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளது.

குறித்த பிரதேசத்திற்குச் செல்லும் பேருந்து, பாலம் வரை சென்று நிறுத்தப்பட்டதும், பயணிகள் மூட்டை முடிச்சுகளுடன் பாலத்தைக் கடந்து சென்று அங்கிருந்து சுமார் 2 கிலோ மீட்டர் தூரம் நடந்து செல்ல வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது. இந்த உடைந்த பாலத்திற்கு அருகில் சுமார் 35 இலட்சம் ரூபாய் செலவில் தற்காலிக பாலமொன்றை அமைத்துள்ளனர். அதுவும் வெள்ளத்தினால் உடைந்துள்ளது.

இது தொடர்பாக அரசியல்வாதிகள் மற்றும் அரச அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு சென்ற போதும், இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனவும் தேர்தல் காலங்களில் வாக்கு கேட்டு வந்த அரசியல்வாதிகள் கூட இது தொடர்பாக எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. இவ்வாறு, பாலத்தைப் புனரமைக்காது எந்த அரசியல்வாதிகள் வந்தாலும் அவர்களைப் பிடித்து பாலத்தில் கட்டிப்போடுவோம் என மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் செலுத்தி உரிய நடவடிக்கை எடுக்குமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

– கனகராசா சரவணன்

# முரணான திசையில் பயணிக்கத் தொடங்கியுள்ளதா?

**முருகானந்தம் தவம்**

மாற்றம், மக்களாட்சி, ஜனநாயகம், இன, மத, நல்லிணக்கம், சுதந்திரம் என்ற கோஷங்களோடு மூன்றில் இரண்டு பெரும்பான்மையோடு ஆட்சி பீடம் ஏறிய ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி (ஜே.வி.பி.) அரசு,சில மாதங்களுக்குள்ளேயே வீழ்ச்சி அடையத் தொடங்கியதனால் ஏமாற்றம், நிறைவேற்றதிகாரம, சர்வாதிகாரம், இன, மத நல்லிணக்க விரோதம் என்ற ஜனநாயக ஆட்சிக்கு முரணான திசையில் பயணிக்கத் தொடங்கியுள்ளது.

முன்னைய அரசுகளும் இந்த வழியில் பயணித்தாலும் கூட நாட்டின் உயர் பீடமான பாராளுமன்றத்தில் சர்வாதிகாரத்தைப் பயன்படுத்த வில்லை. எதிர்க்கட்சிகளுக்குள்ள உரிமைகளை அங்கீகரித்தன. எதிர்க்கட்சிகளின் தலைவர்களுக்கான கௌரவத்தை வழங்கின. எதிர்க்கட்சிகளின் கருத்துக்களை செவிமடுத்தன. ஆனால், தற்போதைய அரசு பாராளுமன்றத்தில் கூட எதிர்க்கட்சிகளுக்கு எதிராக சர்வாதிகாரத்தனத்தையும் அடாவடித்தனங்களையும் அடக்கி ஆளுகைகளையும் முன்னெடுக்கின்றது.

சபை முதல்வராக உள்ள அமைச்சர் பிமல் ரத்னாயக்க, சபை சம்பிரதாயங்களையும் நிலையியல் கட்டளைகளையும் எதிர்க்கட்சிகளுக்குள்ள சிறப்புரிமைகளையும் ஒரு பொருட்டாகவே மதிக்காது மிகவும் மோசமான வகையில் தான்தோன்றித்தனமாகவும் சர்வாதிகாரத்தனமாகவும் நடந்து கொள்வது இலங்கை பாராளுமன்றத்தில் முன்னெப்போதும் சபை முதல்வர்கள் நடந்து கொள்ளாத தலைக்கன நடத்தைகளாகவே உள்ளன. தாம் எதிர்க்கட்சியில் இருந்தபோது, எதிர்க்கட்சிகளின் உரிமை என அரசுடன் வாதாடிய, போராடிய இவர்கள் இப்போது முன்னைய அரசுகளை விடவும் சர்வாதிகாரத்தனமாக பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சிகளுக்கு எதிராக நடந்து கொள்ளத் தலைப்பட்டுள்ளனர்.

பாராளுமன்றக் குழுக்களுக்குத் தலைவர்களைத் தெரிவு செய்யும் விடயத்தில் முதலில் தேசிய மக்கள் சக்தி, ஆட்சியாளர்களின் வேடம் கலைந்தது. தாம் எதிர்க்கட்சியில் இருந்தபோது எந்த எந்த பாராளுமன்ற குழுக்களின் தலைவர் பதவிகள் எதிர்க்கட்சிகளுக்கு வேண்டுமெனப் போராடிப் பெற்றார்களோ தாம் ஆட்சியாளர்களான பின்னர் அந்த பாராளுமன்றக் குழுக்களின் தலைவர் பதவிகளை எதிர்க்கட்சிகள் கோரியபோதும், அதனை அவர்களுக்கு வழங்க மறுத்து தாமே வைத்துக் கொண்டனர்.

அதுமட்டுமன்றி, பாராளுமன்றத்தில் அரசைக் கடுமையாக விமர்சிக்கும், குற்றச்சாட்டுக்களை முன்வைக்கும், பதிலளிக்க முடியாத கேள்விகளை எழுப்பும் எதிர்க்கட்சிகளின் எம்.பி.க்கள் இலக்கு வைக்கப்பட்டுப் பழிவாங்கப்பட்டு வருகின்றனர். இவ்வாறானவர்களில் அரசினால் குறிப்பாக சபை முதல்வரான அமைச்சர் பிமல் ரத்னாயக்கவால் தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி முதல் பலிகடாவாகப்பட்டவர் சுயேட்சைக்குழு 17இன் யாழ். மாவட்ட எம்.பியான டொக்டர் அர்ச்சுனா இராமநாதன்.

சபையில் அதிக இடையூறுகளை ஏற்படுத்துவதாகவும் சர்ச்சை பேச்சுக்களைப் பேசுவதாகவும் குற்றம்சாட்டி அவரின் சபை நடவடிக்கைகள் தொடர்பில் ஆராய விசேட குழு நியமிக்கப்பட்டு அக்குழுவினால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளை யடுத்து 4 வாரங்களுக்கு அர்ச்சுனா இராமநாதன் எம்.பி. பாராளுமன்றத்தில் ஆற்றும் உரைகள்,வெளிவிடும் கருத்துக்களை நேரடி ஒளிபரப்பு செய்ய விசேட குழுவின் பரிந்துரையில் தடை விதிக்கப்பட்டது.இவ்வாறான ஒரு தடை பாராளுமன்ற வரலாற்றில் இதற்கு முன்னர் இடம்பெற்றதில்லை. அது மட்டுமன்றி சபையில் அடிக்கடி எழுந்து கேள்வி எழுப்பிய குற்றச்சாட்டில் அர்ச்சுனா இராமன்தான் எம்.பி. சபையிலிருந்தும் வெளியேற்றப்பட்டார்.

அதுமட்டுமன்றி, எதிர்க்கட்சிகளின் சிறப்புரிமைகளைக் வழங்க மறுத்தும் சபாநாயகரைக்கூடத் தனது கட்டுப்பாட்டில் வைத்துக்கொண்டு தன் கண் அசைவு, கையசைவுகளுக்கு செயற்பட வைப்பதுடன், சபா பீடத்திற்கு தலைமை தாங்கும் உறுப்பினர்களைக்கூட, மிரட்டும் தொனியில் உரத்துப் பேசி எதிர்க்கட்சிகளுக்கான நேரத்தை வழங்க விடாது செய்கின்றமை, ஒலி வாங்கியை முடக்குகின்றமை, குறுக்கீடுகள் செய்து பேசவிடாது தடுக்கின்றமை போன்றவற்றில் சபை முதல்வரான அமைச்சர் பிமல் ரத்நாயக்க செயற்படும் விதம் தொடர்பில் எதிர்க்கட்சிகள் ஜனாதிபதியின் கவனத்திற்குக் கொண்டு சென்றபோதும், சபை முதல் வரின் சர்வாதிகாரத்தில் எந்த மாற்றமும் நிகழவில்லை. இவ்வாறான நிலையில், தான் கடந்த வாரப் பாராளுமன்ற அமர்வில் ஐக்கிய அக்கல் சக்தியின் குருநாகல் மாவட்ட எம்.பியான தயாசிறி ஜயசேகர மீதும் சபைமுதல்வரின் சர்வாதிகாரம் பாய்ந்தது. பாராளுமன்றத்தில் கடந்த 20ஆம் திகதி தயாசிறி ஜயசேகர எம்.பிக்கும் சபை முதல்வருக்குமிடையில் கடும் தர்க்கம் ஏற்பட்ட நிலையில், தயாசிறி ஜயசேகரவின் செயற்பாடு தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக சபாநாயகர் ஜகத் விக்ரமரட்னவினால் மூவரடங்கிய குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது.

20ஆம் திகதி சபைக்குள் தயாசிறி ஜயசேகரவின் செயற்பாடு தொடர்பில் என்னிடம் முன்வைக்கப்பட்ட முறைப்பாட்டைக் கருத்திற்கொண்டு, அது தொடர்பில் விசாரணை செய்து அறிக்கையை முன்வைப்பதற்காகப் பிரதி குழுக்களின் தலைவர் ஹேமாலி வீரசேகரவின் தலைமையில் அமைச்சர் விஜித ஹேரத் மற்றும் எதிர்க்கட்சி பிரதம கொரடா கயந்த கருணாதிலக்க ஆகியோரை உள்ளடக்கிய மூன்று பேர்கொண்ட குழு என்னால் அமைக்கப்பட்டுள்ளது என்று சபாநாயகர் சபைக்கு அறிவித்தார்.

ஆனால், இதற்கு கடும் எதிர்ப்பை வெளியிட்ட எதிர்க்கட்சி, அரசாங்கம் இவ்வாறு விசாரணைக் குழுக்களை அமைக்குமாக இருந்தால், இதனை முன்மாதிரியாகக் கொண்டு அரசாங்கத்தினால் போடப்படுவதைப் போன்று எதிர்க்கட்சியும் அரச தரப்பினர்களின் செயற்பாடுகள், இடையூறுகள், அனுமதி மறுப்புக்கள் என எல்லாவற்றுக்கும் சபாநாயகரிடம் முறைப்பாடுகளைச் செய்ய நேரிடும். அப்போது அரசு தரப்பினரின் முறைப்பாடுகளை ஏற்று சபாநாயகர் விசேட விசாரணைக் குழுக்கள் அமைப்பது போன்று எம்முடைய முறைப்பாட்டுக்களி ஏற்றும் அதற்காகவும் விசேட விசாரணைக் குழுக்களைக் குழுக்களையும் நியமிக்க நேரிடலாம் என தெரிவித்தன.

அவ்வாறு கூறியதுடன் மட்டும் நிற்காது, சபைமுதல்வர் அமைச்சர் பிமல் ரத்நாயக்கவின் செயற்பாடுகள் மற்றும் நடத்தைகள் கடந்த கால சபை முதல்வர்களின் நன்னடத்தைக்கு முற்றிலும் விரோதமானது என்று குறிப்பிட்டும் 2025.05.20ஆம் திகதியன்று சபை முதல்வர் நடந்து கொண்ட விதம் குறித்து விசாரணை செய்ய வேண்டும். 10ஆவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடர் ஆரம்பமான தினத்தில் இருந்து சபை முதல்வரின் செயற்பாடுகள் மற்றும் நடத்தைகள் கடந்த கால பாராளுமன்றத்தின் சபை முதல்வரின் நன்னடத்தைகளுக்கு முற்றிலும் விரோதமானது. எனவே, சபை முதல்வர் சபையில் நடந்து கொள்ளும் விதம் குறித்து விசாரணைகளை மேற்கொள்ளுங்கள் என வலியுறுத்தியும் ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பிக்கள் சபாநாயகரிடம் எழுத்து மூலமாகக் கோரிக்கை விடுத்தனர்.

அது மட்டுமன்றி, பாராளுமன்ற நிலையியல் கட்டளைகளைக் கடுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன நடவடிக்கை எடுத்துள்ளார். இதன்படி, பாராளுமன்ற நிலையியல் கட்டளை 27/2இன் கீழ் எழுப்பப்படும் கேள்விகள் தொடர்பில் தீர்மானங்கள் சில எடுக்கப்பட்டுள்ளதாக சபாநாயகர் சபைக்கு அறிவித்தார்.

கேள்விகள் பொது முக்கியத்துவம் மிக்க விடயங்களாக இருப்பது கட்டாயம். சிறிய அறிவித்தலொன்றின் ஊடாக அதற்கான பதிலைப் பெற்றுக்கொள்ளக் கூடிய வகையில், கேள்விகள் தயாரிக்கப்பட வேண்டும். அதேபோன்று, அவ்வாறான கேள்விகளின் உள்ளடக்கம் ஒரு குறிப்பிட்ட விடயத்தை அடிப்படையாகக் கொண்டதாகவும், அமைச்சர் ஒருவரின் விடயத்துடன் தொடர்புடையதாகவும் இருக்க வேண்டும் . 10ஆவது பாராளுமன்றம் ஆரம்பிக்கப்பட்டது முதல் இதுவரையில் கேட்கப்பட்ட இவ்வாறான கேள்விகள் பொது முக்கியத்துவத்திற்கு அப்பாற்பட்ட கேள்விகளாக இருந்துள்ளன. அத்துடன், ஒரு அமைச்சருக்குப் பதிலளிக்கக் கூடியவாறும் அல்லாமல் அடிக்கடி கேட்கப்படும் கேள்விகளாகவும் இருந்துள்ளன.

இதேவேளை, நிலையியல் கட்டளைகளின்படி இவ்வாறான கேள்விகளின் போது மேலதிக கேள்விகளைக் கேட்பதற்கான ஏற்பாடுகள் இல்லாத போதும் விளக்கமாகக் கோருவது போன்று பெரும்பாலும் மேலதிக கேள்விகளைப் போன்று அவை முன்வைக்கப்படுகின்றன. அதேபோன்று, எதிர்க்கட்சித் தலைவருக்கு மேலதிகமாக வேறு எம்.பி. விளக்கம் கோருவதற்கும் மற்றும் கேள்வியெழுப்புவதற்கும் முயற்சிக்கின்றார். நிலையியல் கட்டளைகளுக்குப் புறம்பாக முன்வைக்கப்படும் கேள்விகள் தொடர்பில் நிலையியல் கட்டளைக்கு அமையத் தேவையான நடவடிக்கை எடுப்பதற்கு எனக்கு நேரிடும் என்பதனை சபைக்கு அறிவிக்கின்றேன் என சபாநாயகர் கூறியுள்ளதன் மூலம் பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சிகள் முடக்கப்படும் நிலையும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டுக்கும் மேற்பட்ட பெரும்பான்மை உள்ளது என்ற தலைக்கனத்தில் ஆடும் அரசு ஆரம்பித்து வைத்துள்ள இந்த தவறான முன்னுதாரணத்தால் இனி பாராளுமன்றத்தில் அரசும் எதிர்க்கட்சிகளும் மாறி மாறி இவ்வாறு ஒருவருக்கொருவர் விசாரணைக் குழுக்களை அமைக்கக் கோரி சபாநாயகரிடம் முறைப்பாட்டு செய்யும் நிலைமை ஏற்படுத்தப்பட்டுள்ளதுடன், எதிர்க்கட்சிகளினால் எழுப்பப்படும் அரசுக்குப் பதிலளிக்க முடியாத, தர்மசங்கடமான, பிரச்சினைகளை ஏற்படுத்தக்கூடிய கேள்விகளைத் தவிர்க்கும், தடுக்கும் நிலை பாராளுமன்றத்தில் தற்போதைய அரசினால் சர்வாதிகாரத்தின் மூலம் உருவாக்கப்பட்டுள்ளது.

# “தன்னுயிரை மாய்த்துக் கொள்வது தீர்வல்ல”



ம.குஷாந்தினி,
உளவியல் துறை,
மூன்றாம் வருடம்,
யாழ். பல்கலைக்கழகம்.

வாழ்க்கையின் நெருக்கடிகள் ஒவ்வொருவருக்கும் வேறுபட்டவை. ஆனால், அவற்றைக் கடப்பதற்கான மன வலிமை அனைவருக்கும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை. இன்றைய கல்விச் சூழல் மாணவர்களின் அறிவாற்றலை மட்டுமல்ல, மனநலத்தையும் சோதிக்கும் களமாக மாறியுள்ளது.

பெற்றோர் மற்றும் சமூகத்தின் எதிர்பார்ப்புகள், இறுக்கமான கல்வித் திட்டங்கள், உறவுச் சிக்கல்கள் போன்றவை ஒரு மாணவரின் மன அமைதியை அத்துமீறி அலைக்கழிக்கின்றன. இதன் விளைவாக, மன அழுத்தம், நம்பிக்கை இழப்பு, தனிமை, உணர்ச்சி கட்டுப்பாடின்மை ஆகியவை ஒருசேர அவர்களைத் தற்கொலை என்ற விபரீத முடிவை நோக்கித் தள்ளுகின்றன.

அண்மைக் காலங்களில், இலங்கையில் பல மட்டங்களில் கல்வி பயிலும் மாணவர்களிடையே தங்கள் உயிர்களை மாய்த்துக்கொள்ளும் எண்ணங்களும் சம்பவங்களும் அதிகரித்திருப்பது ஒரு சமூக அச்சுறுத்தலாக மாறியுள்ளது.

கடந்த சில வாரங்களுக்கு, பல்கலைக்கழக மாணவிகள் இருவரும், 12 வயதான மாணவனும் தங்கள் உயிர்களை மாய்த்துக் கொண்டுள்ளனர். அம்பலாங்கொடையில் தரம் 7இல் பயிலும் 12 வயதான மாணவி, தன்னுயிரை, செவ்வாய்க்கிழமை(27) மாய்த்துக்கொண்டார்.

முதல் சம்பவம் சபரகமுவ பல்கலைக்கழகத்தில் இரண்டாம் ஆண்டு பயிலும் மாணவி, தன்னுயிரை மாய்த்துக்கொண்டார். பகிடி வதை காரணமாகவே அம்மாணவி, இவ்வாறு தவறான முடிவை எடுத்துள்ளதாக அறியமுடிகின்றது.

இதேவேளை, வயம்ப தேசிய கல்வியியல் கல்லூரியில் இரண்டாம் ஆண்டு மாணவி ஒருவரும் தனது விடுதியில் தற்கொலை செய்து கொண்டார். அதற்கான காரணம் அம்பலமாகவில்லை.

மாணவர்கள் தங்கள் உளவியல் தேவைகளை வெளிப்படுத்த உரிய இடங்களும், காதுகொடுத்துக் கேட்கும் மனிதர்களும் இல்லாத நிலையைப் பிரதிபலிக்கிறது. ஒரு மனித வாழ்வின் மிக முக்கியமான பருவமான இளமைக்காலத்தில் ஒருவர் தன்னையே முடித்துக்கொள்ளத் தூண்டப்படுவது, சமூகம், குடும்பம் மற்றும் கல்வி அமைப்புகளில் உள்ள குறைபாடுகளைச் சுட்டிக்காட்டுகிறது.

### அதிர்ச்சி தரும் புள்ளிவிவரங்கள்

2024ஆம் ஆண்டில் இலங்கையில் 18 வயதிற்குட்பட்ட சுமார் 20 பிள்ளைகள் தங்கள் உயிரை மாய்த்துக் கொண்டுள்ளதாக இலங்கை மருத்துவ சங்கம் தெரிவித்துள்ளது. சமூக ஊடகங்களின் தாக்கம் இதற்கு ஒரு முக்கியக் காரணமாகக் கூறப்படுகிறது. 2023ஆம் ஆண்டில் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் மட்டும் ஐந்து சம்பவங்களும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இரண்டு சம்பவங்களும் பதிவாகியுள்ளன.

இந்தச் சம்பவங்கள் அனைத்தின் பின்னணியிலும் மன அழுத்தம் ஒரு முக்கிய காரணியாக இருப்பதைக் காணமுடிகிறது. குறிப்பாக குருநாகல், யாழ்ப்பாணம் மற்றும் கண்டி ஆகிய பிரதேசங்களில் மாணவர்களின் மனநலப் பிரச்சினைகள் மற்றும் தற்கொலைச் சம்பவங்கள் அதிகமாகக் காணப்படுகின்றன.

### மாணவர்கள் ஏன் தங்கள் உயிரை மாய்த்துக்கொள்வதற்கு தள்ளப்படுகிறார்கள்?

உலக சுகாதார நிறுவனத்தின் புள்ளிவிவரப்படி, உலக அளவில் 13 முதல் 19 வயதுக்குட்பட்ட மாணவர்களின் மரணத்தில் தங்கள் உயிர்களை மாய்த்தல் மூன்றாவது முக்கிய காரணமாகும். இன்றைய காலகட்டத்தில் மாணவர்கள் முந்தைய தலைமுறையினரை விட அதிக சுதந்திரத்தை அனுபவிக்கிறார்கள். ஆனால், இந்தச் சுதந்திரம் சில சமயங்களில் தவறான பாதைகளுக்கும் இட்டுச் செல்கிறது. சில மனநல மருத்துவர்களின் கூற்றுப்படி, இன்றைய மாணவர்களால் ஒரு சிறு தோல்வியைக்கூட எதிர்கொள்ள முடிவதில்லை. தோல்விகளை எதிர்கொள்ளும்போது ஏற்படும் பெரும் மன அழுத்தத்தைக் கையாளத் தெரியாமல் தவிக்கின்றனர். சாதாரணப் பிரச்சினைகளைக்கூடப் பெரிய பிரச்சினைகளாகக் கருதுவதால், வெளி உலகின் மீதும், தன் மீதும் கோபம், வெறுப்பு ஏற்பட்டு, இயலாமை, தாழ்வு மனப்பான்மை போன்ற எண்ணங்கள் மேலோங்குகின்றன. இது வன்முறையாகவோ அல்லது தற்கொலையாகவோ மாறுகிறது.

காதல் உறவுகள், பாடசாலை மற்றும் பல்கலைக்கழக மாணவர்களின் வாழ்வில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. காதல் தோல்வியால் ஏற்படும் தனிமை உணர்வு, கைவிடப்பட்ட நிலை போன்றவை வாழ்வை அர்த்தமற்றதாக உணர்த்தித் தங்கள் உயிரை மாய்க்கத் தூண்டுகின்றன. தெற்காசிய மக்கள் பொதுவாக எளிதில் உணர்ச்சிவசப்படக்கூடியவர்களாகவும், உறவுகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பவர்களாகவும் இருப்பதால் இது ஒரு காரணமாக இருக்கலாம்.

இவற்றைத் தவிர, பல்கலைக்கழகங்களில் சிரேஷ்ட மாணவர்களால் மேற்கொள்ளப்படும் பகிடிவதை என்ற பெயரில் நடைபெறும் சித்திரவதைகள் மற்றும் அவமானப்படுத்தல்கள் தங்கள் உயிர்களை மாய்த்துக்கொள்ளும் எண்ணத்தை வளர்க்கின்றன. இவ்வாறான வன்முறைகளுக்கு எதிராகச் சரியான நடவடிக்கைகளும், தண்டனைகளும் இல்லாத காரணத்தால் இது மேலும் வலுப்பெற்றுள்ளது. இது எத்தனை பெற்றோரின் கனவுகளை வேரோடு பிடுங்கியெறியப் போகிறதோ தெரியவில்லை.

### தங்கள் உயிர்களை மாய்த்துக் கொள்ளும் எண்ணங்களைத் தடுப்பது எப்படி?

13 முதல் 25 வயது வரையிலான இளமைப் பருவம், மிகப்பெரிய மாற்றங்களைச் சந்திக்கக்கூடிய சவாலான காலகட்டமாகும். இந்த வயதில் உள்ள மாணவர்கள் தங்கள் குழப்பங்களையும், எண்ணங்களையும் யாரிடம் கேட்பது, யாரிடம் சொல்வது என தவிக்கின்றனர். இந்தச் சூழ்நிலையில், அவர்கள் சொல்வதைக் காதுகொடுத்துக் கேட்கவும், நம்பத் தகுந்த, அக்கறையான மனிதர்கள் அவர்கள் வாழ்வில் இருக்க வேண்டும். அப்படி யாரும் இல்லாதபோது, தற்கொலை முடிவை அவர்கள் கடைசி வழியாகத் தேர்ந்தெடுக்கிறார்கள்.தற்கொலை எண்ணங்களைத் தடுக்கவும், மாணவர்களின் மனநலத்தைப் பாதுகாக்கவும் நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும்

### அந்த எண்ணத்தை தடுப்பதற்கான வழிமுறைகள்

- மாணவர்களின் மனநலப் பிரச்சினைகளைக் கண்டறிந்து, அவர்களுக்குத் தேவையான ஆலோசனைகளையும், ஆதரவையும் வழங்கக்கூடிய அனுபவம் வாய்ந்த உளவியல் நிபுணர்களைக் கொண்ட ஆலோசனை மையங்கள் அனைத்துக் கல்வி நிறுவனங்களிலும் கட்டாயமாக்கப்பட வேண்டும்.
- பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளின் மனநிலையில் ஏற்படும் மாற்றங்களை அவதானிக்கவும், அவர்களுடன் வெளிப்படையாகப் பேசவும் கற்றுக்கொள்ள வேண்டும். பிள்ளைகளின் பிரச்சினைகளைக் கேட்டு, அவர்களைப் புரிந்துகொள்ளும் மனப்பான்மையை வளர்த்துக்கொள்ள வேண்டும்.
- மன அழுத்தம், தோல்வியை எதிர்கொள்ளும் திறன், உணர்ச்சிகளைக் கையாளும் வழிமுறைகள் போன்றவற்றை உள்ளடக்கிய மனநலக் கல்வி பாடத்திட்டத்தில் சேர்க்கப்பட வேண்டும்.
- சமூக வலைத்தளங்கள் மாணவர்களின் மனநலத்தைப் பாதிக்கும் வகையில் அமையும் உள்ளடக்கங்களைக் கட்டுப்படுத்த வேண்டும். மேலும், மனநல உதவிக்கான தகவல்களைப் பரப்ப வேண்டும்.
- கல்வி நிறுவனங்களில் பகிடிவதையை முழுமையாக ஒழிக்கக் கடுமையான சட்ட நடவடிக்கைகளும், தண்டனைகளும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். மாணவர்கள் தங்கள் புகார்களை அஞ்சாமல் தெரிவிக்கக்கூடிய சூழலை உருவாக்க வேண்டும்.
- சமூக ஆதரவு நண்பர்கள், உறவினர்கள், சமூக அமைப்புகள் என அனைவரும் மாணவர்களின் மனநலத்தைப் பாதுகாக்கப் பொறுப்பேற்க வேண்டும். ஒருவருக்கொருவர் ஆதரவாக இருந்து, தேவைப்படுபவர்களுக்கு உதவ முன்வர வேண்டும்.

தங்கள் உயிர்களை மாய்த்துக்கொள்ளல் ஒரு தீர்வல்ல. அது வாழ்க்கையின் அழகிய வண்ணங்களை இழந்து, இருண்ட பாதைக்குள் நுழைவதற்கு ஒப்பாகும். மாணவர்களின் மனநலப் பாதுகாப்பில் சமூகத்தின் ஒவ்வொரு தனி மனிதருக்கும் பொறுப்பு உள்ளது. நாளைய சமூகத்தை உருவாக்கும் இளைஞர்களின் மனநலத்தைப் பாதுகாப்பதே நம் அனைவரின் தலையாய கடமையாகும்.





உகந்தை முருகன் ஆலய புனித பூமியில்

# புத்தர் சிலையும் தொடரும் சர்ச்சைகளும்

பாறுக் ஷிஹான்

தொன்மை வரலாறு கொண்ட உகந்தை முருகன் ஆலயம் கடந்த சில நாட்களாக இலங்கையிலும் சர்வதேச அளவிலும் பேசு பொருளாக மாறிய வருகின்றது.

அம்பாறை மாவட்டத்தின் லாகுகல பிரதேச செயலாளர் பிரிவு தென் எல்லையில் அமைந்துள்ள தமிழர்களுடைய தொன்மையும் புராதனமும் வரலாறும் கொண்ட உகந்தை முருகன் ஆலய புனித பிரதேச பகுதியில் காணப்படும் ஒரு மலையில் திடீரென அப்பகுதியில் நிலை கொண்டுள்ள கடற்படையினரால் ஸ்தாபிக்கப்பட்ட புத்தர் சிலை தொடர்பான விவகாரம் தொடர்பில் பல்வேறு எதிர்மறையான கருத்துக்கள் தகவல்கள் ஊடகங்கள் வாயிலாக வெளியாகியுள்ளன.

இந்த விடயத்தை ஆராயும் விதமாக ஊடகவியலாளர் உட்பட சக செயற்பாட்டாளர்கள் குழு அப்பகுதிக்கு சென்று, குறித்த புத்தர் சிலை நிர்மாணம் குறித்து ஆராய்ந்துள்ளது. இதற்கமைய ஆலயத்தில் காணப்பட்டவர்களிடம் பேசுகின்ற போது, இந்த புத்தர் சிலை நிறுவுகின்ற விடயம் ஏற்கெனவே குறிப்பிட்டது போன்று 2023இல் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது என்றும் 2024இல் ஒரு புத்தர் சிலை இங்கே நிறுவப்பட்டது என்றும் கூறப்பட்டது.

அத்துடன், கடந்த இரண்டு மாதங்களாக இந்த புத்தர் சிலை பெரிய அளவிலே இங்கே ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது என்றும் கூறப்பட்டது.

இந்த விடயம் தொடர்பில் நேரடியாக அந்த இடத்திற்கு சென்ற நாம் அவதானித்தது அந்த இடத்தில் முருகன் ஆலயத்திற்கு முன்பாக கடற்கரை பிரதேசத்தில் வலது புறம் வள்ளியம்மன் மலை தோணிமலை போன்றவைகளும் இடது புறம் கடற்படை முகாமோடு இணைந்ததாகக் காணப்படுகின்ற ஒரு மலையும் அந்த மலையில் தான் இந்த புத்தர் சிலையும் நிறுவப்பட்டிருக்கிறது.

இந்த உகந்தை ஆலய பிரதேசம் என்பது சைவத் தமிழர்களுடைய பூர்வீகமான ஒரு வரலாற்றிடமாகும். இங்கு எவ்வாறு இந்த புத்தர் சிலை நிறுவப்பட்டது? யாரால் நிறுவப்பட்டது? ஏன் நிறுவப்பப்பட்டது? இதனுடைய பின்னணி என்ன? என்பதை பற்றி எல்லாம் ஆராயப்பட வேண்டும்.

அற்கு நாங்கள் அவதானித்த போது, இந்த புத்தர் சிலை கடற்படை முகாமில் இருந்து வந்த சிவில் உடை தரித்த இருவரால் கொண்டு வரப்பட்டுள்ளதுடன், அந்த சிலையுள்ள மலையும் துப்ரபுவு செய்யப்பட்டதையும் காண முடிந்தது.

இந்த சிலை கடற்படைக்கு தெரியாமல் வேறு யாரும் நிறுவியிருக்க முடியாது. இது அவர்களுடைய கடற்படை முகாமுடன் காணப்படும் மலை பிரதேசம் என்பதையும் நாங்கள் அறிந்து கொண்டதோடு, இது அவர்கள் வழிபடுவதற்காக நிறுவியிருக்கலாம் என்றொரு கருத்தும் அங்கு கூறப்பட்டது.

அவ்வாறு கடற்படையினர் வணங்குவதாக இருந்தால், அதை அவர்களது முகாமினுள் வைத்திருக்கலாமே, ஏன்? அதை பொது வெளியில் அதுவும் உகந்தை முருகன் திருவம்பாவை காலத்தில் தீர்த்தமாடுகின்ற அந்த பிரதேசத்தில் நிறுவினார்கள் எனும் கேள்வியும் எழுகிறது.

மேலும், உகந்தை முருகன் திருவெம்பாவை காலத்தில் தீர்த்தம் ஆடுகின்ற அந்த பிரதேசத்தில் இதற்கு முன்னர் ஒரு சூலம் நிறுவப்பட்டிருந்தது என்றும் இப்போது அந்த சூலம் அகற்றப்பட்டிருக்கிறது என்றும் அது யாரால்? ஏன்? அகற்றப்பட்டது எனும் கேள்வியும் எழுகிறது.

நாங்கள் சென்ற அந்த நாளன்று, ஆலயத்திற்குப் புலனாய்வுத் துறையினரும் வந்து, இதை யார் புகைப்படம் எடுத்தது யார்? ஊடகங்களில் வெளியிட்டது யார்? என்று கேட்டிருந்தார்கள் என்றும் இந்த இடத்திற்குப் பாதுகாப்பு வழங்குவதற்காக அவர்கள் வருகை தந்து நின்றார்கள் என்று இரு பொலிஸாரும் வந்திருந்தார்கள் எனவும் கூறப்பட்டது. அந்த பொலிஸாரை அப்பகுதியில் காண முடிந்தது.

மேலும், அந்த இடத்தில் ஒரு அச்சமான பதட்டமான சூழலையும் நாங்கள் அவதானித்தோம். அதைத் தொடர்ந்து இந்த விடயங்களை ஆராய்ந்து தகவல்களை சேகரித்த பின்னர் நாங்கள் அங்கிருந்து வெளியாகியிருந்தோம் என செய்தியாளர் தெரிவித்தார்.

அத்துடன், எங்களிடம் இருக்கின்ற கேள்வி உகந்தைமுருகன் ஆயத்தின் மலையில் வள்ளியம்மன் ஆலயத்தை அண்டியதாக அமைக்கப்படவிருந்த முருகன் சிலையினை அமைக்க வேண்டாம் என்று தடுத்து நிறுத்திய வன இலாகா மற்றும் ஏனைய திணைக்களங்கள் ஏன்? இந்த புத்தர் சிலை நிர்மாணத்தை நிறுத்தவில்லை என்ற கேள்வியும் எழுகிறது.

எனவே, இதன் பின்னணி என்ன என்பதையும் இது தொடர்பான உண்மைகளையும் உரிய திணைக்களங்கள் உடனடியாக விசாரித்து உரிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்பதோடு, இந்த சிலை நிறுவிய விடயம் சைவத் தமிழர்களிடையே அதிர்ச்சியையும் தங்களுடைய உரிமை மறுக்கப்பட்டு இன்னும் ஒரு சமூகத்திற்கு உரிமை வழங்கப்பட்டிருக்கின்ற விடயத்தையும் பேசுபொருளாக இருக்கிறது. எனவே, இந்த அரசு உடனடியாக இதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்,

இந்த சிலையை அப்புறப்படுத்த வேண்டும் என்றும் எங்களுடைய கோரிக்கையை முன் வைக்கின்றோம். இந்த சிலை பற்றிய விடயத்தை நாங்கள் பேசுகிறபோது, சன்னியாசி மலையும் எங்களிடம் இருந்து பறிபோயிருக்கிறது அங்கும் ஒரு புத்தர் சிலை நிறுவப்பட்டிருக்கிறது.














சூடான்

சூடானில் வேகமாக பரவும் வாந்திபேதி

# 170 பேர் பலி

சூடானில் பரவிய புதிய வாந்திபேதி (காலரா) தொற்று காரணமாக ஒரு வாரத்தில் மாத்திரம் 170க்கும் மேற்பட்டோர் பலியாகியுள்ளனர்.

தலைநகரான கார்ட்டூம் மற்றும் ஓம்டுர்மனில் பெரும்பாலான நோய்த் தொற்று பாதிப்புகள் பதிவாகியுள்ளன.

ஆனால், வடக்கு கோர்டோபான், சென்னார், காசிரா, வெள்ளை நைல் மற்றும் நைல் நதி மாகாணங்களிலும் காலரா நோய்த் தொற்று கண்டறியப்பட்டுள்ளதாக,



அந்நாட்டு சுகாதாரத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

சூடானின் சுகாதார அமைச்சர் ஹைதம் இப்ராஹிம் கூறுகையில்,

“கடந்த நான்கு வாரங்களில் கார்ட்டூம் பகுதியில் சராசரியாக 600 முதல் 700 வரை காலரா நோய்த் தொற்று பதிவாகியுள்ளது” என்றார்.

காலரா என்பது பாக்டீரியாவால் ஏற்படும் ஒரு தொற்றுநோய். அசுத்தமான உணவு அல்லது குடிநீரைக் குடிப்பதன் மூலம் பரவுகிறது. இது கடுமையான வயிற்றுப்போக்கு மற்றும் நீரிழப்புக்கு வழிவகுக்கும். காலரா நோயானது தற்போது சூடானில் வேகமாகப் பரவி வருகிறது.



ரஷ்யா

# நான்கு உக்ரைன் கிராமங்களை கைப்பற்றிய ரஷ்யா

ரஷ்யா, செவ்வாய்க்கிழமை (27), தொடர் குண்டுவீச்சு தாக்குதல் நடத்தி இருப்பதுடன், எல்லையோர உக்ரைன் கிராமங்களைக் கைப்பற்றி இருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

போர் ஆரம்பித்த காலத்தில், உக்ரைன் படைகள், ரஷியாவின் குர்ஸ்க் பகுதியைக் கைப்பற்றியதாக அறிவித்தன.

குர்ஸ்க் பகுதியின் எல்லையான சுமி என்ற இடத்தை மையமாகக் கொண்டு இந்த இடையக மண்டலத்தை உருவாக்க ரஷ்யா முயன்று வருகிறது. இதன் எதிரொலியாக ரஷ்யா, உக்ரைன் எல்லையில் கடுமையான தாக்குதல்களை நடத்தி வருகிறது.

அடுக்கடுக்கான குண்டுவீச்சு மற்றும் டிரோன் தாக்குதலால் உக்ரைனின் எல்லையோர 4 கிராமங்கள் ரஷ்யாவால் கைப்பற்றப்பட்டுவிட்டதாக உக்ரைன் தெரிவித்துள்ளது.

இருந்தபோதிலும் அந்த கிராமங்களில் மக்கள் ஏற்கெனவே வெளியேற்றப்பட்டுவிட்டனர் என்றும், உக்ரைனுக்குள் முன்னேற ரஷ்யா முயற்சிப்பதாகவும் உக்ரைன் இராணுவம் குற்றம்சாட்டியுள்ளது.



பிரித்தானியா

பேரணிக்குள் புகுந்த கார்:

# 50 பேர் காயம்

பிரித்தானியாவில், கால்பந்து வெற்றி பேரணியில் கார் ஒன்று புகுந்து விபத்துக்குள்ளானதில், 50 பேர் காயமடைந்தனர்.

பிரித்தானியா நாட்டில், கால்பந்து பிரீமியர் லீக் போட்டியில் லிவர்பூல் அணி வெற்றி பெற்றது. இதனை தொடர்ந்து செவ்வாய்க்கிழமை (27) மாலை, வெற்றி கொண்டாட்டத்திற்காக லிவர்பூல் நகரத்தின் பல்வேறு வீதிகளில் இலட்சக்கணக்கான மக்கள் குழுமியிருந்தனர்.

அவர்கள் பேரணியாகத் திரண்டு சென்றனர். அப்போது யாரும் எதிர்பாராத வகையில் கார் ஒன்று மக்கள் கூட்டத்திற்குள் திடீரென புகுந்தது. இதில், 4 குழந்தைகள் உட்பட 50 பேர் காயம் அடைந்தனர்.

இதில், காருக்கு அடியில் ஒரு குழந்தை உட்பட 4 பேர் சிக்கிக் கொண்டனர். நீண்டநேர போராட்டத்திற்குப் பின்னர் அவர்கள் அனைவரும் மீட்கப்பட்டனர். சம்பவம் நடந்த 2 மணிநேரத்தில் 53 வயதுடைய நபர் ஒருவரை மெர்சிசைடு பொலிஸார் கைது செய்தனர்.

சம்பவத்தின்போது, சிலர் கார் ஓட்டுநரைத் துரத்திச் சென்றனர். சிலர் கார் மீது எட்டி உதைத்தனர். எனினும், இது பயங்கரவாத தாக்குதல் இல்லை என பொலிஸார் தெரிவித்தனர்.

மும்பை

ஆபரேஷன்சிந்தூரை

# விமர்சித்த மாணவி விடுதலை

‘ஆபரேஷன் சிந்தூர்’ குறித்தும் இந்தியா - பாகிஸ்தான் போர் குறித்தும் சமூக வலைத்தளத்தில் சர்ச்சைக்குரிய வகையில் பதிவிட்டதற்காகக் கைதுசெய்யப்பட்ட 19 வயது பொறியியல் மாணவி விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

குறித்தசம்பவத்தை தொடர்ந்து, இதனிடையே சர்ச்சைக்குரிய பதிவிற்காக சிங்காட் அகாடமி ஆஃப் இன்ஜினியரிங் கல்லூரி அந்த மாணவியைக் கல்லூரியிலிருந்து நீக்கியது.

இதனையடுத்து, கைது செய்யப்பட்டதற்கும் கல்லூரியிலிருந்து தன்னை நீக்கியதை எதிர்த்தும் அந்த மாணவி மும்பை உயர்நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்தார்.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதி கௌரி கோட்சே தலைமையிலான அமர்வு, உடனடியாக மாணவியை விடுதலை செய்ய உத்தரவிட்டது.

மேலும், “ஒருவர் தன் கருத்தை வெளிப்படுத்தியதால் அவருடைய வாழ்க்கையை நீங்கள் இப்படிதான் அழிப்பீர்களா? உங்களால்




ஒரு மாணவியின் வாழ்க்கை பாழாகிவிட்டது. மாணவியின் வாழ்க்கையில் விளையாட அரசும், கல்லூரி நிர்வாகமும் யார்? என அடுக்கடுக்காக கேள்விகள் கேட்ட நீதிபதிகள் மகாராஷ்டிர அரசுக்கு கடும் கண்டனம் தெரிவித்தனர்.

இந்தியா

கொரோனா தொற்றாளர்களின்

# எண்ணிக்கை 1,000ஐ கடந்தது

இந்தியாவில், கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை 1,009ஆக உயர்ந்துள்ளது

கேரளா, மகாராஷ்டிரா, டெல்லி ஆகிய மாநிலங்கள் முறையே முதல் மூன்று இடங்களில் உள்ளன.

இதில் அதிகபட்சமாகக் கேரளாவில் 430 கரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதையடுத்து, மகாராஷ்டிராவில் 209 பேருக்கும் டெல்லியில் 104 பேருக்கும் குஜராத்தில் 83 பேருக்கும் கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளது.

அந்தமான் நிகோபார் தீவுகள், அருணாச்சல பிரதேசம், அசாம், பிஹார், இமாச்சல பிரதேசம், ஜம்மு காஷ்மீர்



போன்ற மாநிலங்களில் கரோனா தொற்று இதுவரை உறுதி செய்யப்படவில்லை.

கடந்த வாரம் மே 19ஆம் திகதி நாட்டில் கொரோனா நோயாளிகள் எண்ணிக்கை 257ஆக இருந்தது.

இந்நிலையில், ஒரு வாரத்தில் புதிதாக 752 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளது.

ஐ.பி.எல்:

# முதலாவது தகுதிகாண் போட்டியில் பெங்களூரு

இந்தியன் பிறீமியர் லீக்கின் (ஐ.பி.எல்) முதலாவது தகுதிகாண் போட்டிக்கு றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூரு தகுதி பெற்றுள்ளது.

லக்னோவில் செவ்வாய்க்கிழமை (27) நடைபெற்ற லக்னோ சுப்பர் ஜையன்ட்ஸுடனான போட்டியில் வென்று புள்ளிகள் பட்டியலில் இரண்டாமிடத்தைப் பெற்றதைத் தொடர்ந்தே முதலாவது தகுதிகாண் போட்டிக்கு பெங்களூரு முன்னேறியிருந்தது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: பெங்களூரு

லக்னோ: 227/3 (20 ஓவ.) (துடுப்பாட்டம்: றிஷப் பண்ட் ஆ.இ 118 (61), மிற்செல் மார்ஷ் 67 (37) ஓட்டங்கள். பந்துவீச்சு: நுவான் துஷார 1/26 [4], குருனால் பாண்டியா 0/14 [2])

பெங்களூரு: 230/4 (18.4 ஓவ.) (துடுப்பாட்டம்: ஜிதேஷ் ஷர்மா ஆ.இ 85 (33), விராட் கோலி 54 (30), மாயங்க் அகர்வால் 41 (23), பில் ஸோல்ட் 30 (19) ஓட்டங்கள்)



போட்டியின் நாயகன்: ஜிதேஷ் ஷர்மா.

இந்நிலையில் முல்லான்பூரில் இன்றிரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள முதலாவது தகுதிகாண் போட்டியில் பஞ்சாப் கிங்ஸை பெங்களூரு எதிர்கொள்ளவுள்ளது.



# துப்பாக்கி சூட்டில் கயல் வெற்றி

■ டி.கே.ஜி.கபில

ரைபிள் துப்பாக்கி சுடுதல் போட்டியில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்திய கயல் லியனகே, மூன்றாவது இடத்தைப் பிடித்து வெண்கலப் பதக்கத்தை வென்று புதன்கிழமை (28) காலை கட்டுநாயக்க விமான நிலையம் வந்தடைந்தார்.

காயல் லியனகே (12 வயது) கொழும்பில் உள்ள ஒரு சர்வதேச பாடசாலையொன்றில் கல்வி கற்கும் மாணவியாவார் .

இந்தப் போட்டி உலகின் 64 நாடுகளைச் சேர்ந்த 1,095 விளையாட்டு வீரர்களின் பங்கேற்பில் செக் குடியரசின் ஸ்னோய்மோவில் நகரில் மே 10ஆம் திகதி முதல் மே 25ஆம் திகதி வரை நடைபெற்றது.

இலங்கையின் துப்பாக்கி சுடுதல் போட்டி வரலாற்றில் ஒரு தனிநபர் வென்ற முதல் சர்வதேச பதக்கம் இது என்று இலங்கை தேசிய ரைபிள் சங்கத்தின் தலைவர் ரியர் அட்மிரல் மஞ்சுள திசாநாயக்க தெரிவித்தார்.

குறித்த மாணவியின் பெற்றோர், உறவினர்கள் மற்றும் இலங்கை ரைபிள் சங்கத்தின் உயர் அதிகாரிகள் குழு அவரை வரவேற்க கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.





# டொட்டென்ஹாம் செல்லும் சனே?

ஜேர்மனிய புண்டெலிஸ்கா கால்பந்தாட்டக் கழகமான பயேர்ண் மியூனிச்சின் முன்களவீரரான லெரோய் சனேயைக் கைச்சாத்திடும் வாய்ப்பு இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான டொட்டென்ஹாம் ஹொட்ஸ்பருக்கு வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மியூனிச்சுடனான 29 வயதான சனேயுடனான ஒப்பந்தமானது அடுத்த மாதத்துடன் முடிவடைகின்றமை குறிப்பிடத்தக்கது.



# இந்தியாவின் களத்தடுப்புப் பயிற்சியாளராகத் திரும்புப் திலிப்

இந்திய ஆண்கள் அணியின் முன்னாள் களத்தடுப்புப் பயிற்சியாளரான டி. டிலிப், தேசிய அணிக் கட்டமைப்பு மீள அழைக்கப்பட்டுள்ளது போலத் தோன்றுகிறது.

டிலிப்புக்கு ஓராண்டு தற்காலிக நீடிப்பு வழங்கப்பட்டுள்ளது. அடுத்த மாதம் இங்கிலாந்துக்கு இந்திய அணியுடன் டிலிப் பயணமாகவுள்ளார்.

முன்னதாக மே மாதம் ஒப்பந்தம் முடிவடைந்த பின்னர் மீண்டும் புதுப்பிக்கப்படாதென டிலிப், அபிஷேக் நாயர் உள்ளிட்டவர்களுக்கு கூறப்பட்டிருந்தது.

டிலிப், நாயர் போன்றோர் றோஹித் ஷர்மாவுக்கு நெருக்கமானவர்களெனக் கூறப்படுகின்ற நிலையில் கௌதம் கம்பீர் தலைமைப் பயிற்றுவிப்பாளராக ஆதிக்கம் செலுத்தும் பொருட்டே இவர்கள் நீக்கப்பட்டிருந்தனர்.

இந்நிலையில் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையையும், கம்பீரையும் டிலிப்பை றோஹித் ஏற்றுக் கொள்ள வைத்துள்ளார்.

# பார்சிலோனாவுடனான ஒப்பந்தத்தை நீடித்த யமால்

ஸ்பானிய லா லிகா கால்பந்தாட்டக் கழகமான பார்சிலோனாவின் முன்களவீரரான லமீன் யமால், கழகத்தில் அவர் 2031ஆம் ஆண்டு வரையில் நீடிக்கும் ஒப்பந்த நீடிப்பொன்றைக் கைச்சாத்திட்டுள்ளதாக அக்கழகம் செவ்வாய்க்கிழமை(27) அறிவித்துள்ளது.

பார்சிலோனாவுடனான 17 வயதான யமாலின் முன்னைய ஒப்பந்தமானது 2026ஆம் ஆண்டுடன் முடிவடைவதாகக் காணப்பட்டிருந்தது.

நடப்புப் பருவகாலத்தில் 55 போட்டிகளில் 18 கோல்களைப் பெற்ற யமால், 25 கோல்களைப் பெற உதவியிருந்தார்.

இந்நிலையில், சில பெறுபேறு அடிப்படையிலான சரத்துக்களை அடைந்தால் பார்சிலோனாவின் அதிக ஊதியம் பெறும் வீரராக யமால் மாறுவாரெனக் கூறப்படுகிறது.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை 29, மே 2025, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.